Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

மலர் 7 இதழ் 89

National Tamil Daily தேசிய தினசரி

(11-5-65)

விசுவாவசு சித்திரை 29 முஹர்ரம் பிறை 9 செவ்வாய்க்கிழமை

# கிளிநொச்சிக் குடியேற்றப் பகுதியில் பசி, பட்டினி!

கிளிநொச்சி, திங்கள்

கிளிநொச்சி குடியேற்ற பகுதியில் சூறாவளியின் சேதத்தாலும் நெல்விளைவின்மையாலும் மிகக்கொடிய பஞ்சம் தொடங்கியுள்ளது. பல குடியேற்ற வாசிகள் தங்கள் காலாந்த உணவுக்குக்கூட வழியின்றித் தங்கள் நகைகளையும் உடமைகளையும் விற்பனவு செய்கின்றார்கள். எந்தவிதமான வருமானமும் இன்றி தவிக்கின்றார்கள்.

## சகாய வேலை கொடுத்து உதவ அரசாங்க அதிபருக்கு கோரிக்கை

இக்கொடிய பஞ்சத்தை நிவர்த்திக்கும் நோக்கமாக குடியேற்றப்பகுதிகளில் உள்ள மக்களின் சேவையைப்பயன்படுத்தும்முகமாக சகாய வேலைத் திட்டத்தை ஆரம்பிக்குமாறும், காலபோக நெல்வேளாண்மை அழிந்தமையால் பயிர் இன்சூரன்ஸ் பணம் உதவுமாறும் உருத்திரபுரம் கிழக்கு கிராம முன்னேற்றச் சங்க செயலாளர் திரு பொ அப்புத்துரை அரசாங்க அதிபருக்கு கரைச்சி காரியாதிகாரி மூலம் ஒரு அவசரவேண்டுகோள் அனுப்பியுள்ளார்.

குடியேற்றப் பகுதியில் சகாய வேலைத்திட்டம் ஆரம்பித்தால் ஆண்கள், பெண்கள் இருவர்களுக்கு ஒரு சிறுதொகை சம்பளம் கிடைக்கும். இதைக் கொண்டு ஓரளவு அன்றாட வாழ்க்கையைச் சமாளிக்க உதவும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

காலபோக நெல்வேளாண்மை பூரணமாக அழிந்தமையால் நெற்காணிச் சட்டப்படி பயிர் இன்சூரன்ஸ் பணம் குடியேற்ற வாசிகளுக்கு கொடுப்பதால் அவர்கள் அடுத்த நெல்வேளாண்மைக்கு நிலத்தைப் பண்படுத்தவும் விதைநெல் வாங்கவும் உதவும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சமஷ்டி ஆட்சியில்தான் பிரச்னைகள் தீரும்

## பருத்தித்துறை வரவேற்பில் மந்திரி திருச்செல்வம்

பருத்தித்துறை, திங்கள்

"தேசிய அரசாங்கத்தினால் மொழிப்பிரச்னை தீர்க்கப்படும் என்ற நம்பிக்கை உண்டு. அத்துடன் தமிழ் பேசும் மக்களது இழந்த உரிமைகள் சிலவற்றையாவது ஒத்துழைப்பதனால் பெற முடியும் என்றும் நம்புகின்றோம். இந்த வேளையில் தமிழரசுக்கட்சியினராகிய நாம் எமது கொள்கைகளையும் இலட்சியங்களையும் கைவிடமாட்டோம் என உறுதி கூறுவதுடன் ஒரு சமஷ்டி அரசியல் அமைப்பில்தான் எமது பிரச்னைகட்கு நிரந்தர பரிகாரம் ஏற்பட முடியும் என்பதையும் திட்டவட்டமாகக் கூற விரும்புகிறேன்."

இவ்வாறு ஸ்தலஸ்தாபன அமைச்சர் திரு. எம். திருச்செல்வம் பருத்தித்துறைக்கடற்கரை மைதானத்தில் நடைபெற்ற வரவேற்புக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

திரு க. இராமநாதபிள்ளை தலைமையில் நடைபெற்ற இவ் வரவேற்புக் கூட்டத்தில் மந்திரி திருச்செல்வம் மேலும் பேசுகையில் தமிழ் பேசும் மக்களிடையே நிலவி வந்த அடிமைமனப்பான்மை அகலவும் தமிழ் பேசும் மக்களுக்கும் இந்நாட்டின் ஆட்சி உரிமையில் பங்கு உண்டென்பதையும் உணரவைக்கு முகமாகவும் தான் தான் அமைச்சரவையில் சேர்ந்ததாகவும் பருத்தித்துறை நகரசபை எல்லைக்குட்பட்ட மக்களது மின்சாரவசதி, குழாய் நீர் விநியோக வசதி, வீட்டுவசதியாகிய பலவைகளைத் தீர்த்து வைக்க முயல்வதாகவும் உறுதி கூறினார். தேசிய அரசாங்கம் இந்த மூன்று துறை உதவிகளிலும் கவனம் செலுத்த திட்டமிட்டிருப்பதாயும் அவர் தெரிவித்தார்.

சுப்பர் மடத்தில் இருந்து மாலை ஐந்து மணிக்கு ஆரம்பமான ஊர்வலம் புலோலி, மாதனை, கற்கோவளம், தும்பளை வழியாக சுமார் 7 மைல் தூரம் சென்று எட்டு மணி நேரத்தால் மைதானத்தை அடைந்தது. வழியெங்கும் மக்கள் பூரணகும்பம் வைத்து மலர்மாலை சூட்டித் திலகமிட்டு மகிழ்ச்சியுடன் மந்திரியை வரவேற்றனர்.

பருத்தித்துறைத் தொகுதிப் பிரதிநிதி திரு. க. துரைரத்தினம் தமக்கும் அமைச்சருக்கும் அளித்த மகத்தான வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

இன்றைய அரசியல் நிலையில் நாம் சந்தோஷப்படவோ, துக்கப்படவோ வேண்டியதில்லை வெகு அவதானமாக நிலைமையை நோக்க வேண்டும் அதிகம் பேசாமல் இருப்பதே நன்மையாகும் நாம் பதவியை என்றும் விரும்பவில்லை பதவியைவிட இனத்தின் இழந்த உரிமைகளே எமக்கு முக்கியம் 1957-ம் ஆண்டில் இருந்த சூழ்நிலைதான் இன்றும் உண்டு இந்த ஆண்டு முடியும்வரை தமிழ்ப்பேசும் மக்கள் நம்பிக்கையை இழக்காமல் பொறுமையுடன் இருக்க வேண்டும்.

துறைமுக அபிவிருத்தி, தொலைபேசி விஸ்தரிப்பு முயற்சியைபற்றி நடவடிக்கைகளை மேற்கொள்ள இருப்பதுடன் வாலிபர் மத்தியில் வேலைவாய்ப்பை ஏற்படுத்தவும் ஆவன செய்வதாகத் திரு. துரைரத்தினம் தெரிவித்தார்.

திரு. எ. சதாசிவம் வரவேற்புரை நிகழ்த்தினார். திரு த. இராமநாதபிள்ளை பேசுகையில் தமிழரசுக்கட்சியின் வெற்றிக்கு வாலிபர்களின் காரணம் எனக் கூறினார்.

திரு க. ஜெயக்கொடி பேசுகையில், செல்வா-பண்டா ஒப்பந்தத்தை எதிர்த்துப் பிரச்சாரம் செய்தவர்கள் திரு. திருச்செல்வத்தின் பேச்சை பிரஸ்தாபித்துத் திரிகின்றனர் என்றார்.

கிளிநொச்சி எம் பி பண்டிதர் க பொ இரத்தினம், தமிழரசுக்கட்சித் தலைவர் திரு எஸ் ஜே வி செல்வநாயகம், ஊர்காவற்றுறை எம் பி திரு வ. நவரத்தினம், வட்டுக்கோட்டை எம் பி திரு அ அமிர்தலிங்கம், திருமதி அமிர்தலிங்கம், திரு. ஜே பி வின்சென்ற் முதலான பலர் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

# "கிளிநொச்சித் தொகுதியில் மரவரிமுறையை நீக்குக!"

## கி. மு. சங்க சமாஜம் கோரிக்கை

கிளிநொச்சி திங்கள்

பொதுவாக கிளிநொச்சித் தொகுதியிலிருந்தும் சிறப்பாக குடியேற்ற பகுதியிலிருந்தும் மரவரித் திட்டத்தைப் பூரணமாக எடுத்துவிடவேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் அன்று சென்றவாரம் கரைச்சி கிராம முன்னேற்றச் சங்கங்களின் சமாஜ பொதுக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது

இக்கூட்டத்துக்கு சமாஜத் தலைவர் திரு க நல்லதம்பி தலைமைவகித்தார். கிளிநொச்சித் தொகுதி பாராளுமன்ற அங்கத்தவர் பண்டிதர் கா பொ இரத்தினம் இல்லத்தில் நடைபெற்ற இச்சமாஜப் பொதுக் கூட்டத்தில் பண்டிதர் கா பொ இரத்தினம் உட்பட கரைச்சிப் பகுதியில் சுமார் 19 கிராம முன்னேற்றச் சங்கங்களின் தலைவர், காரியதரிசிகள், தனாதிகாரிகள் ஆகியோர் பங்குபற்றினார்கள்

மரவரித் திட்டத்தை ஒழிப்பதில் சமாஜக் கூட்டத்தில் பூரண கருத்தொற்றுமை நிலவியது இப்பகுதியில் மரவரித் திட்டத்தில் உள்ள கூலிவேலைத் தொழிலாளர்களில் நூற்றுக்கு 90 வீதத்துக்கு மேற்பட்டவர்கள் இந்நாட்டவர்கள் அல்லர் என்றும் அவர்கள் இந்திய கூலித் தொழிலாளர்கள் என்றும் எனவே மரவரித் திட்டத்தை ஒழிப்பதால் இந்நாட்டவர் பாதிக்கப்படமாட்டார்கள் என்றும் விவாதத்தின்போது கருத்துத் தெரிவிக்கப்பட்டது. கள்ளுத் தேவையானால் கூலித் தொழிலாளர்களும் கள் குடியர்களும் சேர்ந்து கூட்டுறவுத் தவறணைகளை அமைத்துக் கொள்ளலாம் என்றும் அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது

இப்பகுதியில் உள்ள மரவரித் திட்டத்தின் கீழ் வெளிநாட்டு கூலித்தொழிலாளர்கள் அதிக லாபம் அடைவதுடன் இந்த நாட்டுப்பணம் வெளியேறுகின்றதென்றும் இப்பகுதியிலுள்ள தென்னைகள் கள்ளுக்கு உபயோகிப்பதால் தேங்காயின் விலை மிக அதிகரித்துள்ளது என்றும் மரவரித்திட்டம் இருப்பதால் ஆண், பெண், குழந்தைகள் எல்லோரும் குடிப்பழக்கத்தை மேற்கொள்வதும் சீர்கேடான வாழ்க்கை முறைகள் வளர்வதும் அதிகம் என்றும் சமாஜப்பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.

கரைச்சிப்பகுதியில் சில வருடங்களுக்கு முன்னர்தான் மரவரித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது, இத்திட்டம் ஆரம்பமுதலே அங்கு இல்லை என்றும் பாராளுமன்ற பிரதிநிதிக்கு எடுத்துக்காட்டப்பட்டது. பிரதிநிதி பண்டிதர் கா. பொ. இரத்தினம் தமது தொகுதியிலிருந்து மரவரித் திட்டத்தை அகற்ற முயற்சி செய்வதாகக் கூறினார். கரைச்சி கிராமமுன்னேற்றச் சங்க சமாஜம் இத் தீர்மானத்தை ஒரு மகஜர்மூலம் பாராளுமன்ற அங்கத்தவர்களுக்கும் அரசாங்க அதிபருக்கும் தெரிவிப்பதென இறுதியாக தீர்மானித்தது.

வாஷிங்டனிலிருந்து

# பதில் வரும்வரை பொறுத்திருப்போம்

## அமெரிக்க ஆயுதங்களை பாக். உபயோகிப்பது குறித்து சாஸ்திரி

புதுடில்லி, மே 10

"இந்தியாவுக்கு எதிராக அமெரிக்க ஆயுதங்களை பாகிஸ்தான் உபயோகிப்பது குறித்து அமெரிக்காவுக்கு தெரியப்படுத்தியுள்ளோம். வாஷிங்டனிலிருந்து இதுசம்பந்தமாக பதில் வரும்வரை நாம் பொறுத்திருப்போம்" என்று இந்தியப்பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி இன்று லோகசபையில் பேசுகையில் கூறினார்.

"அமெரிக்காவிடமிருந்து வரும் பதிலையோ அல்லது நடவடிக்கையையோ பொறுத்துத்தான் நாம் மேற்கொண்டு என்ன செய்யவேண்டுமென்று தீர்மானிக்கவேண்டும். அதுவரையில் பொறுமையாக இருப்போம். பதில் எதுவும் வராவிடில் எமது நடவடிக்கை என்ன என்பதை பின்னர் தெரிவிப்போம்" என்றும் பிரதமர் சாஸ்திரி குறிப்பிட்டார்.

அங்கத்தவர்களின் கேள்விகளுக்கு பிரதமர் பதிலளிக்கையில் இந்தியா அணுகுண்டு தயாரிக்காதென்றும் அணுகுண்டு தயாரிப்பதில்லை என்பது இந்தியாவின் ஒரு கொள்கையாக இருக்கிறதென்றும் இது ஒரு கொள்கைத் தீர்மானமாகும் என்றும் கூறினார்.

'அணுகுண்டுகளை தயாரிப்பதில்லை என்ற எமது கொள்கை இப்போது அமுலில் இருக்கிறது' என்றும் பிரதமர் சாஸ்திரி குறிப்பிட்டார்.

ராஜ்யசபையில் அங்கத்தவர்களின் கேள்விகளுக்கு இந்திய பாதுகாப்பு மந்திரி திரு. வை பி. சாவன் பதிலளிக்கையில், "எமது எல்லைச் சண்டையில் பாகிஸ்தான் அமெரிக்க டாங்கிகளை மட்டும் உபயோகிக்கவில்லை; அமெரிக்காவின் சகல ரக ஆயுதங்களையும் பயன்படுத்துகிறது இதற்குப் சான்றுகள் எம்மிடம் இருக்கின்றன" என்றும் கூறினார்.

## சீனாவின் உள்நோக்கம்

வாஷிங்டன், மே 10

தென்கிழக்கு ஆசியா முழுவதையும் கைப்பற்றுவதே கம்யூனிஸ்ட் சீனாவின் உள்நோக்கம் என்று அமெரிக்க வெளியுறவு உதவி மந்திரி தெரிவித்துள்ளார்.

தென் வியட்நாமில் கம்யூனிஸ்டுகளின் ஆக்கிரமிப்பை அமெரிக்கா ஒருபொழுதும் சகிக்காது என்றும் அவர்களின் திட்டங்களை அமெரிக்கா தவிடு பொடியாக்கும் என்றும் அவர் எச்சரிக்கை செய்துள்ளார்.

## 'ஈழநாடு' சூறாவளி நிதி

யாழ்ப்பாணம், செவ்

கண்டி திவ்யஜீவன சங்கத்தின்மூலம் சுமார் 50 ரூத்தல் தேயிலை 'ஈழநாடு' சூறாவளி நிவாரணத்துக்காகக் கிடைக்கப் பெற்றோம்.

டெஹ்ரான், மே 10

ஈரானின் முன்னாள் பிரதமர் ஹசன் அலி மன்சூரைக் கொலை செய்த குற்றத்துக்காக இளைஞன் ஒருவனுக்கு இன்று மரண தண்டனை விதிக்கப்பட்டது.

ஹசன் அலி மன்சூர், பார்லிமெண்டுக்குள் நுழையும்பொழுது துப்பாக்கியால் சுடப்பட் [illegible] நடைபெற்றது.

'ஈழநாடு' சூறாவளி நிவாரண நிதி

# பச்சிலைப்பள்ளிப் பகுதியில் 2-வது முறையாக வழங்கப்பட்டது

யாழ்ப்பாணம், செவ்.

'ஈழநாடு' சூறாவளி நிவாரண நிதிச்சபையினரும் பச்சிலைப்பள்ளி பகுதி காரியாதிகாரியும் 9-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை நேரில் சென்று மருதங்கேணி, வத்திராயன் உடுத்துறை, ஆழியவளை, கரணவாய் வடக்கு முதலிய இடங்களுக்குச்சென்று புயலில் தங்கள் தலைவர்களை இழந்த குடும்பங்களுக்கு இரண்டாவது முறையாக நிதி உதவி வழங்கினர். எல்லா இடங்களுக்கும் மொத்தமாக 595 கொடுத்து உதவினர்.

## புனிதஸ்தலங்களுக்கு ஆலோசனை சபைகள்

பம்பலப்பிட்டி, திங்கள்

புனிதஸ்தலங்களான கதிர்காமத்துக்கும், கண்டிக்கும் ஆலோசனை சபைகளை ஸ்தல ஸ்தாபன மந்திரி திரு எம். திருச்செல்வம் நியமித்துள்ளார். இவ்விரண்டு சபைகளின் தலைவராக ஸ்தலஸ்தாபன மந்திரியின் நிரந்தரக்காரியதரிசி திரு ஆர். பிரேமதாசா இருப்பார். திரு டபிள்யூ. எஸ். கீர்த்திசிங்கி இவ்விரண்டு சபைகளின் காரிய தரிசியாகப் பணியாற்றுவார்.

## பழமைவாய்ந்த பௌத்த சின்னம்

புதுடில்லி, மே 10

குஜராத்தின் ஒரு மாகாணத்தில் நிலத்துக்கடியிலிருந்து பழையகாலப்பௌத்த சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

பிறருக்குச்சேவை செய்வதே பூஜையாகும். ஆகினும் பஜனைக் கூட்டம், பூஜை முதலியவை உண்மையான சேவைக்கு உதவுகின்றன. உள்ளத்தில் ஆண்டவனுடைய நினைவை நிறுத்தப் பயன்படுகின்றன.

— மகாத்மாகாந்தி

ஈழநாடு

EELA NADU National Tamil Daily, Post Box 69, Jaffna. Telegrams: 'EELA NADU' Jaffna Phone: 389.

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு சித்திரை ௴ 29 உ. (11-5-65)

## தமிழ்த் தலைவர்களிடை ஒற்றுமை வேண்டும்

இரு மந்திரிகளின் யாழ்ப்பாண விஜயம்பற்றித் தமக்கு எந்தவித தகவலும் முன்னதாகக் கிடைக்கவில்லையென்றும் இவ்வித சம்பவம் உள்ளூராட்சி மன்றங்களுக்கும் மத்திய அரசாங்கத்துக்குமிடையில் நிலவ வேண்டிய சுமுகமான உறவைப் பாதிக்கக் கூடியதென்றும் யாழ்ப்பாண நகரமேயர் பிரதம மந்திரிக்கு எழுதிய ஒரு கடிதத்தில் தெரிவித்திருந்தார். நகரத்தின் முதல்வர் என்ற முறையில் அவருக்கு அறிவித்திருக்க வேண்டியதே முறையாகும்.

இருமந்திரிகள் இங்கு வந்தது பெரிதும் வரவேற்கத்தக்கதே. சென்ற சில ஆண்டுகளாக இல்லாத நல்ல சூழ்நிலை இப்பொழுது தோன்றியுள்ளது. மந்திரிகள் மட்டுமல்ல, பிரதமமந்திரியுங்கூட இங்கு வந்து இப்பகுதி மக்களின் குறைகள், கஷ்டநஷ்டங்களை நேரில் கண்டு, கேட்டு அறிந்து அவற்றை நீக்க முயற்சிசெய்ய வேண்டுமென்றே மக்களும் எதிர்பார்க்கின்றனர். மந்திரிகள் இங்கு வந்துபோவதால் இப்பகுதியிலுள்ள குறைகள் நீங்க வழி கிடைப்பதுடன் இலங்கையின் ஐக்கியமும் தேசிய ஒருமைப்பாடும் வலுப்பெற உதவலாம். தமிழ்பேசும் மக்களின் பிரதிநிதிகளின் ஆதரவுடனும் ஒத்துழைப்புடனும் தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்ட பொழுது இலங்கையின் இருபெரும் சமூகங்களுக்கிடையில் நிலவிய வேற்றுமை மட்டுமல்ல தமிழ்பேசும் மக்களுக்குள்வேயே கட்சி ரீதியாக நிலவிய வேற்றுமைகளும் நீங்கி ஒற்றுமையேற்படும் நல்ல சூழ்நிலையை பொதுத் தேர்தல் முடிவுகள் தோன்றத் துணையாக உதவி புரிந்திருக்கின்றன என்று மக்கள் மகிழ்ச்சியடைந்தனர். தமிழ்பேசும் மக்களைப் பொறுத்தவரையில் தங்களுக்குச் சேவைசெய்யவும் தங்கள் உரிமைகளைப் பெற்றுத்தரவும் இருதலைவர்களும் வேண்டும் என்று தீர்ப்பளித்தனர். தேசிய அரசாங்கத்தில் இருதரப்பினரும் சேர்ந்த பொழுது தங்களுக்கு விடிவுகாலம் தோன்றிவிட்டதென்றும் அகமகிழ்ந்தனர்.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக தமிழ்பேசும் மக்கள் எதிர்பார்த்த ஒற்றுமையைத் தலைவர்களுக்கிடையில் காண முடியவில்லை. இனியும் இந்த ஒற்றுமை ஏற்படுமென்று எதிர்பார்ப்பதற்கான அறிகுறிகளையும் காணவில்லை. இதற்கு இருமந்திரிகளின் யாழ்ப்பாண விஜயத்தின்போது நிகழ்ந்த சம்பவங்களே சான்று. யார்சரி, யார் தவறு என்பதைப்பற்றி இப்பொழுது சர்ச்சை செய்வதைவிட இனியாவது இது போன்ற துரதிர்ஷ்டநிலை நிகழாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது அவசியம். மந்திரிகளின் விஜயம் மக்களுக்குள்ளும் மந்திரி சபைக்குள்ளும் தொல்லையை ஏற்படுத்தி அதன்மூலம் பிரதமருக்குத் தலையிடியைக் கொடுக்கக் கூடியதாக இருக்கக் கூடாது. ஒரே அரசாங்கத்திலுள்ளவர்கள் தங்களுக்குள் வேறுபட்டு நிற்பது "ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்கு வேட்டை" என்பதுபோல் ஏற்கனவே 'சாம்பார் அரசாங்கம்' என்று கேலிசெய்யும் எதிர்க்கட்சியினருக்கு இடமளிப்பதாகும். எந்த மந்திரிகளும் எவரின் அழைப்பை ஏற்று எப்பகுதிகளுக்குச் செல்வதாயினும், அப்பகுதி எம். பிக்கள் எதிர்க்கட்சியைச் சார்ந்தவராக இருப்பினும் அவர்களுக்கும் தமது விஜயத்தைப் பற்றி அறிவிப்பதே ஜனநாயகப்பண்பு. தனிப்பட்ட செல்வாக்கு, கட்சியின் வளர்ச்சி ஆகியவைகளை விட நாட்டின் ஒற்றுமையையும் முன்னேற்றத்தையுமே தலைவர்கள் மட்டுமல்ல முக்கியமாக மந்திரிகள் கருத்திற்கொள்ளவேண்டும். மந்திரிகளின் விஜயத்தில் அவர்களின் நிகழ்ச்சிகள் பற்றி பிரதமர் சிறிது கவனம் செலுத்த வேண்டும். இல்லையேல் அவரது அரசாங்கத்துக்கே அதுபலவீனமாகவும் ஆபத்தாகவும் முடியலாம்.

தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்டுள்ள தமிழ்த்தலைவர்களுக்கும் ஒரு வார்த்தை கூறவேண்டும். ஒன்றுபட்டால்தான் உண்டு வாழ்வு. தமிழ்பேசும் மக்களின் நன்மையை முன்னிட்டு தங்கள் கட்சி முதலிய வேற்றுமைகளை ஒதுக்கி, புதிய ஒற்றுமையுடன் தொண்டுசெய்ய முன்வர வேண்டியது அவர்களது பெருங் கடமை. இக் கடமையில் எக்காரணம் பற்றியும் தவறினால் அவர்கள் தமிழ் சமூகத்தின் மதிப்பை உயர்த்தவோ அல்லது [illegible] அரசியல் பாவத்திற்கு உட்பட்டதாக முடியும்.

## மந்திரிகளுக்கு கோரிக்கை

யாழ்ப்பாணம், செவ்.

கடந்த 61-ம் ஆண்டு முதல் 65-ம் ஆண்டு வரை மாநகர சபைக்குச் சொந்தமான முடிக்குரிய காணி (குருநகர் குடியேற்றத் திட்டம்) எஞ்சியுள்ள வெளியில் காணி தரும்படி யாழ். மேயருக்கும் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபருக்கும் உயர் அதிகாரிகளுக்கும் விடுத்திருந்த கோரிக்கைகளைத் தொடர்ந்து நடவடிக்கை எடுப்பதாக எமக்கு வாக்குறுதி அளிக்கப்பட்டும் இன்றுவரை அதைப்பற்றி அக்கறை காட்டவில்லை. தற்பொழுது யாழ். நகருக்கு விஜயம் செய்த இரு மந்திரிகளும் பார்வையிட்டு தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமெனக் கோரி திரு. ஜெயதர்மராஜா குருநகர் வாலிபசங்கம் சார்பாக மகஜர் ஒன்றைச்சமர்ப்பித்துள்ளார். இதனுடன் யாழ்ப்பாணத்தில் சமூக சேவையாளர், ஏழைகளுக்கு இலவசப்பண உதவி மாதாந்தப்பணம் சிலருக்குக் கூடுதலாக வேண்டுமென்றும் இதற்கு நடவடிக்கைகளை விரைவில் எடுக்குமாறும் திரு. தர்மராஜா மந்திரிகளைக் கேட்டுள்ளார்.

# "அரசாங்கத்தை ஆதரிப்பது தமிழ் மக்கள் கடமை"

## கரணவாயில் மந்திரி முகமது

உடுப்பிட்டி, திங்கள்

"சாதி, மத பாகுபாடற்ற நீதியான முறையிலே நமது தேசிய அரசாங்கம் ஆட்சி செலுத்தும், தேசிய அரசாங்கத்திற்கு ஆதரவு கொடுக்க வேண்டியது தமிழ் மக்களுடைய கடமை. தமிழ் மக்களும் சிங்கள மக்களும் ஒற்றுமையின்றித் தனியே வாழ முடியாது. சகல இனத்தவரிடையேயும் ஒற்றுமை வேண்டும். இந்த நாட்டில் தமிழ், சிங்கள, முஸ்லிம் சமூகத்தினரிடையே பரஸ்பர உறவும் சகோதர மனப்பான்மையும் நிலவவேண்டுமென்பதே தேசிய அரசாங்கத்தின் நோக்கமாகும். மக்களுடைய வீடில்லாப் பிரச்னை, வாழ்க்கைச் செலவுப் பிரச்னை முதலியவற்றைப் புதிய தேசிய அரசாங்கம் தீர்த்துவைக்கும். முந்திய அரசாங்கங்கள் நாட்டிலே சாதி வேற்றுமையை உண்டுபண்ணி அமைதியைக் குலைத்துவிட்டன. தமிழ்மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு அரசாங்கம் கவனஞ் செலுத்தும். உங்கள் பிரச்னைகளை இரண்டு மூன்று நாட்களில் தீர்த்துவைக்க முடியாது. அரசாங்கத்தின் கஷ்டத்தையும் நீங்கள் உணரவேண்டும்."

இவ்வாறு தொழில் வீடமைப்பு அமைச்சர் ஜனாப் முகமது உடுப்பிட்டித் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. மு. சிவசிதம்பரத்தை வரவேற்குமுகமாக கரணவாய் கலட்டிப் பிள்ளையார் கோவிலுக்கண்மையில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் கூறினார்:

மந்திரி முகம்மது மேலும் கூறியதாவது:-

"எதிர்வரும் ஐந்துவருடங்களும் தேசிய அரசாங்கம் நாட்டு மக்களுக்கு நல்லசேவை செய்யக் காத்திருக்கிறது. கூடிய விரைவில் இப்பகுதியில் வீடமைப்புத் திட்டமொன்றை அமைக்கவிருக்கின்றேன். நமது தலைவர் திரு. டட்லி சேனநாயக்கா மிகவும் நல்லவர்; நடைமுறையாளர். அவர் மீது நீங்களனைவரும் நம்பிக்கை வைக்கவேண்டும்."

ஜனாப் முகம்மது பேச ஆரம்பிக்கையிலேயே மழை சிறிது தூற ஆரம்பித்திருந்தது. தூறும் மழையையும் கவனியாது அமைச்சர் பேசினார். பொது மக்களும் கேட்டுக் கொண்டிருந்தனர்.

தேசியசேவை அமைச்சர் திரு. சுகததாச பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

நமது வரவைக்கண்டு இங்கு ஆனந்த மழை பொழிவதாகவே கருதுகிறேன். இன்று முழுவதும் நல்லூர், கோப்பாய், புத்தூர், அச்சுவேலி, நெல்லியடி ஆகிய இடங்களில் யாழ்ப்பாண எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தின் செல்வாக்கால் நமக்கு மிகவும் அமோகமான வரவேற்புக் கிடைத்தது. நீங்கள் எதற்கும் கவலைப்படவேண்டாம். நாங்கள் சொல்வீரர்களல்ல செயல் வீரர்கள்" என்று கூறினார்.

யாழ்ப்பாண எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

கடந்த தேர்தலின்போது, இலங்கையில் சர்வாதிகார ஆட்சியா? ஜனநாயக ஆட்சியா? என்ற கட்டத்தில் ஜனநாயக ஆட்சியையே நாமும் நமது கட்சியும் ஆதரிப்போம் என்று கூறிவந்தோம். நாம் பகிரங்கமாகக் கூறியது போன்றே இன்று யு. என். பி. யை ஆதரிக்கிறோம். தமிழினத்தின் மொழிப் பிரச்னையைத் தீர்ப்பதென்றால் ஜனநாயக சிங்களக் கட்சியுடன் நாம் ஒத்துழைக்கவேண்டும். இனிமேலாவது தமிழினத்தின் ஒற்றுமையைக் குலைக்காமல் ... தமிழரசு கட்சியினரைத் தயவாய்க் கேட்டுக்கொள்கிறேன்,

நாம் எமது தேர்தல் பிரசாரத்தின்போது வாக்குக் கொடுத்தபடியே வேலையில்லாத் திண்டாட்டம், வீடமைப்பு முதலிய பிரச்னைகளை நேரில் காண்பித்துத் தீர்த்து வைப்பதற்காகவே இரு மந்திரிகளையும் வரவழைத்தோம். நாம் தேர்தலின்போது கொடுத்த வாக்குகளை நிறைவேற்றியே தீருவோம் என்பதற்குச் சாட்சியாக மந்திரிகள் இன்று உங்கள் முன்னிலையில் தாம் அனைத்தையும் செய்து தருவதாகக் கூறியுள்ளனர். இதை எவரும் மறக்கவேண்டாம். நாங்கள் இவர்களுடன் ஒத்துழைக்கிறோம். ஆனால் சிங்களமும் தமிழும் இந்நாட்டில் சமமான அந்தஸ்துடன் வாழ இவர்கள் உதவிசெய்யவேண்டும் இல்லாவிட்டால் இவர்களுக்கெதிராக நாம் போட்டியிடுவோம்.

உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் பேசுகையில் குறிப்பிட்டதாவது;-

எனது வெற்றிக்கு வாலிபர்களும் சிறுபான்மைத் தமிழ் மக்களுமே காரணமாக இருந்தார்கள் என்பதை என்னால் மறுக்கமுடியாது. வாலிபரின் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்காகவும், கருப்பநீர்ச்சட்டத்தைத் தளர்த்துவதற்காகவும் நான் அரும்பாடுபட்டுவருகிறேன். சிங்களத்தலைவர்களின் மத்தியிலே தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளை வழங்க வேண்டும் என்றஎண்ணம் நிறைந்துள்ளது. புதிய தேசிய அரசாங்கத்தின்கீழ் நமது பிரச்னைகள் முக்கியமாகத்தீர்க்கப்படவேண்டும் என்றே நம்புகிறேன். எதற்கும் தமிழ்மக்கள் சிறிது பொறுத்திருக்கவேண்டும்.

உடுவில் தொகுதி தமிழ்க் காங்கிரஸ் பிரமுகர் திரு. என். சிவநேசன், திரு. க. ஸ்ரீபாஸ்கரன் உட்படப் பலர் பேசினர்.

மாலை 7 மணியளவில் கரணவாய்ச்சந்தியிலிருந்து இரு மந்திரிகளும் தமிழ்க் காங்கிரஸ் தலைவரும், திரு மு. சிவசிதம்பரமும் அலங்கரித்த ஜீப் வண்டியில் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர். பொய்க்கால் குதிரை, பொம்மையாட்டம், வாணவேடிக்கை முதலியனவற்றுடன் மந்திரிகள் ஊர்வலமாக அழைத்துவரப்பட்டனர். தமக்களிக்கப்பட்ட கௌரவத்திற்கு இரு மந்திரிகளும் தமது பேச்சினிடையே பலதடவைகள் நன்றி தெரிவித்தனர். தமிழ் மக்கள் தம்மை நன்கு உபசரித்ததையிட்டுதாம் பெருமைப்படுவதாக அவர்கள் கூறினர்.

## கி. மு. சங்கம் மந்திரிக்கு கடிதம்

யாழ்ப்பாணம், செவ்.

"இலங்கையின் இரண்டாவது முக்கிய தொழிலான மீன்பிடித் தொழிலுக்கு வேண்டிய உதவியும், உற்சாகமும் அளித்து எமது நாட்டின் வெளிநாட்டுச் செலாவணியை மிச்சப்படுத்தி நாட்டு நலனுக்குப் பெருந் தொண்டுபுரிவீர்கள் என எதிர்பார்க்கிறோம்" எனக் கைத்தொழில் மீன்பிடி மந்திரி திரு. பிலிப் குணவர்த்தனவுக்கு அனுப்பிய கடிதமொன்றில் மயிலிட்டி கிராம முன்னேற்றச் சங்க சனசமூக நிலையத்தினர் குறிப்பிட்டுள்ளனர். கடந்த வருடத்தில் ஏற்பட்ட சூறுவளி காரணமாக மயிலிட்டி மீனவர்களுக்கு விளைந்த நஷ்டங்கள் குறித்தும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஐயாறன் எழுதுவது

அண்ணாமலை பல்கலைக்கழகத்துக்கு நாம் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம். பல இந்திய மாணவர்களுக்கு இடமில்லை என்று சொல்லி அனுப்பிவிடும் இச் சர்வகலாசாலையினர் இலங்கை மாணவ மணவிகளிடம் விசேஷசலுகைகாட்டிச்சேர்த்துக் கொள்கிறார்கள். செலாவணி, பிரயாணத்தடைகள் இல்லாவிடில் முன்போல் நம் மாணவர்களுக்கு அங்கு அதிகஇடம் கிடைக்கக்கூடும்.

நம் மாணவர்களுக்கு இடமளிப்பதுடன் நில்லாது ஈழத்து வாலிபர் ஒருவரை அங்கு விரிவுரையாளராகவும் நியமித்து இலங்கையைக்கௌரவித்திருப்பதைக் கண்டேன். அவர்யார் தெரியுமா? யாழ்ப்பணத்தைச் சேர்ந்தசுசீந்திரராஜா என்பவர் ஆவர். திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலை அதிபராக இருந்து ஓய்வு பெற்ற சுவாமிநாதன் அவர்களின் மூன்றாவது புதல்வர், சென்னை சர்வகலாசாலையிலேயே டாக்டர் வரதராஜனிடம் கல்வி பயின்று தமிழில் எம். ஏ. பட்டம் பெற்றவர். கொழும்பிலே இருவருடங்கள் பத்திரிகைகளில் பணியாற்றி அண்ணாமலையில் பேராசிரியர் டி. பி மீனாட்சிசுந்தரனாரிடம் திராவிட மொழிகளைப் பயின்று அதிலும் எம். ஏ. பட்டம் பெற்றுள்ளார். சமஸ்கிருதம், மலையாளம் இவற்றில் தேறி இப்போது தெலுங்கும் பயில்கிறாராம். இலங்கையில் பேசும் தமிழ்பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரையை 'டாக்டர் பட்டத்துக்காக எழுதிவரும் அவர், அங்கு விரிவுரையாளராகவும் நியமிக்கப்பட்டதை அறிய மிக மகிழ்ச்சியாகவுள்ளது. ஈழத்துக்கு அண்ணாமலை சர்வகலாசாலையினர் செய்து வரும் நன்மைகளுக்கு நாம் என்ன கைமாறு செய்யப்போகிறோம்!

மாலையிலே பேராசிரியர் மீனாட்சிசுந்தரனாரின் தலைமையில், ஈழத்து மாணவ மாணவிகள் கூடியிருந்த ஒரு கூட்டத்தில் பேச எனக்கு வாய்ப்புக்கிடைத்தது. தங்கள் தாய்நாடான ஈழத்திலிருந்து பணம் பெற முடியாமல் இருப்பது அவர்களுக்கு மிகச்சங்கடமளிக்கின்றது. அங்கு பல்லாண்டுகள் படித்துப், பெறும் பட்டங்களை இலங்கை அங்கீகரிக்காமல் அவர்களுக்கு சமவேலைவாய்ப்புகள் கிடைக்காமல் போகுமோ என்ற கவலையும் அவர்களை வாட்டுகின்றது.

இலங்கையில் புதிய அரசாங்கம் ஏற்பட்டுள்ளதாயும், இம்முக்கிய விஷயங்களை தாராள மனப்பான்மையுடன் புனராலோசனை செய்யுமென்றும், அவர்களுக்கு ஆறுதல் கூறினேன். இங்குள்ள தமிழ்ப் பிரதிநிதிகள் இதற்கான முயற்சிகளை உடன் எடுத்து அவர்களது கவலையைத் தீர்க்க முன்வருவரென்றே அவர்கள் புதுநம்பிக்கை கொண்டிருக்கிறார்கள்.

* * *

ஈழத்துக்கும் இந்தியாவுக்கும் கல்விப்பாலமாக அமைந்திருப்பது அண்ணாமலைப் பல்கலைக்கழகமாகும். சிங்களத்துக்கும் அங்கு ஒரு பீடமமைத்தால், சிங்கள மாணவ மாணவிகள் அங்கு சென்று கற்கவும், வீண் தப்பெண்ணங்களும், தடைகளும் நீங்கவும் வழிபிறக்கலாம், தமிழிலுள்ள இலக்கியக்கலைச் செல்வங்கள், சிங்களவர்களுக்கும் பயன்படும்படி செய்தால், தமிழின் அருமை பெருமைகளை அவர்கள் அறியவும், இருசமூகங்களுக்கிடையில் நல்லுறவு பெருகவும் வழி பிறக்கலாம். இவ்வித அன்பு வழியில் இந்திய—இலங்கைப் பிரச்னைகளைத் தீர்க்கவும் அண்ணாமலை எவ்வளவோ உதவக்கூடுமல்லவா? பேராசிரியர் மீனாட்சிசுந்தரன் இதற்கான முறையில் விரிந்த மனப்பான்மையுடன் தொண்டாற்றுவதைப் பார்க்க மிக

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# "ஆட்சி பீடத்தில் சுகர்ணே இருக்கும் வரை மலேசிய பிரச்னை ஒருபோதும் தீராது"

## நம்பிக்கை தளர்ந்துவிட்டது

### பிரதமர் துங்கு அப்துல்ரஹ்மான் அறிவிப்பு


கோலாலம்பூர், மே 10

**இந்தோனேஷியாவின் தலைமைப்பீடத்தில் அதிபர் சுகர்ணே இருக்கும்வரை மலேசியாவுக்கும் - இந்தோனேஷியாவுக்குமிடையே உள்ள பிரச்னை ஒருபொழுதும் தீரமாட்டாது என்றும் தமது கடைசி நம்பிக்கையும் தளர்ந்துவிட்டது என்றும் மலேசிய பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.**

மலேசியப் பிரச்னையைத் தீர்த்துவைக்கடோக்கியோவில் எடுக்கப்பட்ட முயற்சிகளுக்கு சுகர்ணே முட்டுக்கட்டையாக இருந்தது குறித்து பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் கண்டனம் தெரிவித்தார்.

இதுசம்பந்தமாக அவர் மேலும் தெரிவிக்கையில், டோக்கியோவில் மேற்கொள்ளப்படவிருந்த பேச்சுக்களில் "வரம்பை"யும் கடந்து செல்ல நாம் தயாராகவிருந்ததாகவும் ஆனால் சுகர்ணோவின் முட்டுக்கட்டை தமது முயற்சிகளை நாசமாக்கிவிட்டது என்றும் கூறினர்.

"இந்தோனேஷியாவை நசுக்குவதில் ஈடுபட்ட ஏராளமான கொரில்லாக்கள் இப்பொழுது காவலில் இருக்கின்றனர், இவர்களில் சிலர் மலேசியாவில் இருந்து பின்னர் இந்தோனேஷியாவுக்குச் சென்று அங்கு பயிற்சிபெற்றவர்கள்" என்றும் துங்கு கூறினர்.



## ஸ்ரீநகரில் தொடர்ந்து ஆர்ப்பாட்டங்கள்

### "மாண்டவர் தொகை பதினொன்றாக அதிகரித்துள்ளது"

ஸ்ரீநகர், மே 10

ஷேக் அப்துல்லா கைது செய்யப்பட்டதற்கு ஆட்சேபம் தெரிவித்து நேற்றும் ஸ்ரீநகரில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. நேற்றைய ஆர்ப்பாட்டங்களில் மேலும் மூவர் மாண்டதாகவும் பலர் காயமடைந்ததாகவும் பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

**11 பேர் பலி?**

ஸ்ரீநகரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்கள் காரணமாக மாண்டவர்கள் தொகை பதினொன்றாக அதிகரித்திருப்பதாக ஊர்ஜிதமற்ற செய்திகள் கூறுகின்றன.

நேற்று ஸ்ரீநகரிலும் இங்கிருந்து 30 மைல் தூரத்திலும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. சில இடங்களில் ஆர்ப்பாட்டக்காரர்கள் வன்முறைச் செயல்களில் ஈடுபட்டனர். பொலிஸ் நிலையமொன்றும் சில கடைகளும் தீ மூட்டப்பட்டதாக செய்திகள் கூறுகின்றன.

**சீன ஆதரவு சுலோகங்கள்**

நேற்றைய ஆர்ப்பாட்டங்களில் கலந்துகொண்டவர்கள் சீன ஆதரவுச் சுலோகங்களை ஏந்திவிருந்ததுடன் கோஷங்களும்எழுப்பியதாக புதுடில்லி செய்திகள் கூறுகின்றன.

## "அரசாங்கத்தை ஆதரிப்பது தொழிலாளர் கடமை"

### பருத்தித்துறை இ. போ. சபை ஊழியர் மத்தியில் மந்திரி பேச்சு

பருத்தித்துறை, திங்கள்

"எந்த அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்தாலும் அதை ஆதரித்து ஒத்துழைப்பு நல்க வேண்டியது நாட்டின் தொழிலாளர்களது கடமையைச் சரிவரச் செய்தால் அவர்கள் குறைகளை நிவர்த்தி செய்வோம். நாங்கள் தொழிலாளரின் நல்வாழ்வை ஆவலுடன் எதிர்பார்த்து அவர்களுக்கு வேண்டியவற்றைச் செய்ய ஆயத்தமாக இருக்கிறோம். தேசிய அரசாங்கம் பரந்த மனப்பான்மையுடன் பிரச்சினைகளை அணுகி அவற்றை தீர்த்துவைக்கும்".

இவ்வாறு தேசிய சேவை அமைச்சர் திரு வி. ஏ. சுகததாச பருத்தித்துறை இ. போ. ச. டிப்போவுக்கு விஜயஞ் செய்தபோது அங்குள்ள ஊழியர்கள் மத்தியில் பேசுகையில் கூறினர்.

டிப்போவுக்கு உடுப்பிட்டி எம். பி. திரு மு. சிவசிதம்பரத்துடன் தேசியசேவை அமைச்சரும், வீடமைப்புத் துறை அமைச்சரும் விஜயம் செய்தபோது டிப்போ மனேஜரும் தொழிலாளர்சங்க பிரதிநிதிகளும் மலர் மாலை சூட்டி திலகமிட்டு அவர்களை வரவேற்றனர்.

தொடர்ந்து நடைபெற்ற தேநீர்விருந்தில் திருசுகததாச பேசுகையில் தொழிலாளர்கள் சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட மகஜர் பற்றித்தாம் நடவடிக்கையெடுப்பதாக உறுதி கூறியதுடன் விரைவில் இந்த டிப்போவுக்கு புதிய பஸ்களை அனுப்புவதாகவும், குறிக்சப்பட்ட சேவையுடன் தொழிலாளர்களை நிரந்தரமாக்கி உதவுவதாயும் தெரிவித்தார்.

முதலாளிமார்கால சம்பளப் பாக்கிகள், பூனிபோம் முதலானவிஷயங்களிலும் தாம் கவனஞ்செலுத்துவதாயும் கூறிய அமைச்சர் குறைகளையும்தேவைகளையும் பாராளுமன்ற உறுப்பினர் திரு சிவசிதம்பரம் மூலம் தமக்கு தெரிவித்து வைக்கும் படியும் கூறி தங்களுக்கு அளித்த வரவேற்புக்கு நன்றியும் தெரிவித்தார்.

## அயூப்கான் வெளிநாடு விஜயம்

ராவல்பிண்டி, மே 10

பாகிஸ்தான் அதிபர் பீல்ட் மார்ஷல் அயூப்கான் அடுத்த மாதம் வெளிநாடுகளுக்கு விஜயம் செய்யவிருக்கிறார்.

அதிபர் அயூப்கான் பிரிட்டன், ஜோர்டான், அல்ஜீரியா உள்ளிட்டு சில ஆபிரிக்க நாடுகளுக்கு விஜயம் செய்யவிருக்கின்றார். நான்குவார காலம் வெளிநாடுகளில் இவர் தங்கியிருப்பார், அடுத்தமாதம் பதினோராம் திகதி அதிபர் அயூப்கான் தமது வெளிநாட்டு விஜயத்தை மேற்கொள்வார்.

## சிங்களத்தில் பத்திரங்கள்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணத்தில் கடமையாற்றும் பஸ் கண்டக்டர்களுக்கு கொடுக்கப்படும் 'லேபில்கள், (வழிப்பட்டியல்) தனிச் சிங்களத்தில் மட்டுமே இருப்பதாக தெரியவருகிறது,

இதையிட்டு சில பஸ் கண்டக்டர்கள் அதிருப்தி அடைந்துள்ளார்கள் என்றும் இவை சிங்களத்தில் மட்டும் எழுதப்பட்டிருப்பதால், பஸ் கண்டக்டர்கள் அதில் எழுதப்பட்டிருப்பதை விளங்கிக் கொள்ள முடியாமல் திண்டாடுகிறார்கள் என்றும் அறியப்படுகிறது.

இலங்கை போக்குவரத்து சபையிலுள்ள மற்றும் சிலபத்திரங்கள் மும்மொழிகளிலும் எழுதப்பட்டிருந்த போதிலும் இந்த லேபில்கள் தனிச்சிங்களத்தில் மட்டுமே எழுதப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது.

## இரத்த தானம்

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணம் இரத்தவங்கியில் இருந்துவரும் இரத்தப் பற்றாக்குறையைப் போக்குவதற்காக யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவர்கள் முன்வந்துள்ளனர்.

இரத்த வங்கிப் பொறுப்பாளர் டாக்டர் ஜோஸெப், கல்லூரி உயர்தர வகுப்பு மாணவர் மன்றத்தில் இரத்தம் கேட்ட மாத்திரத்திலேயே சுமார் 20 போத்தல் இரத்தம் [illegible] மாணவர்கள் [illegible]ர்கள்.

## 'தமிழ்ச்சங்கங்கள் பல தோன்றவேண்டும்'

— அ. அமிர்தலிங்கம்

யாழ்ப்பாணம், செவ்,

"எமது இனம் எந்தத்திசையில் எப்படி வளரவேண்டும் என்பதை இவ்விருந்து எடுத்துக் காட்டுகிறது. பழமையைக் கைவிடாது புதுமையுடன் கலந்து தமிழ்மொழியை வளர்க்க வட்டுக்கோட்டைத் தமிழ்ச்சங்கம் தயாராய் இருப்பதை நாம் காண்கிறோம்" என்று வட்டுக்கோட்டைப் பிரதிநிதியும் தமிழ்ச்சங்கப் பாதுகாவலருமாகிய திரு. அ. அமிர்தலிங்கம் வட்டுக்கோட்டைத் தமிழ்ச்சங்கம் அளித்த பாராட்டு விருந்திற்கு நன்றி தெரிவிக்கும்போது கூறினர்.

திரு. அமிர்தலிங்கம், திருமதி அமிர்தலிங்கம், திரு. கா. பொ. இரத்தினம், திருமதி க. பொ. இரத்தினம் ஆகியோருக்கு வட்டுக்கோட்டைத் தமிழ்ச்சங்கத்தால் ஒரு பாராட்டுவிருந்து பண்டைத்தரிப்பு மகளிர் கல்லூரியில் அளிக்கப்பட்டது. பாராட்டு விருந்திற்கு திரு. இ. பாலசுப்பிரமணியம் தலைமை வகித்தார், உதவி வித்தியாதிபதி திரு. தணிகாசலம், திரு. சபாபதி, ஆகியோரும் பலதலைமையாசிரியர்களும் பாராட்டுவிருந்தில் கலந்துகொண்டனர். திரு. அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது-

1956-ம் ஆண்டு முதல் சிங்களம் சிறப்புப் பெற்றதால் சிங்களப் பண்டிதர்களும் சிறப்பு பெற்றனர். சிங்களப் பண்டிதர்களுக்கு அளிக்கப்பட்ட முறையைப் பின்பற்றி தமிழ்ப் பண்டித வித்துவான் புலவர்கட்கும் அச்சம்பளம் அளிக்கும்படி கேட்டோம். அப்பொழுது கல்விமந்திரியாகவிருந்த திரு. தஹநாயக்கா சம்மதித்தார். உரிய விபரங்களை உடனடியாக நம்மால் சமர்ப்பிக்கமுடியவில்லை, கூட்டரசாங்க மந்திரியிடம் இதுபற்றி எடுத்துக் கூறினோம், இக்கொள்கை சரியானது என ஏற்றுப் பரிசீலனை செய்யும்போது கூட்டரசாங்கம் தோற்கடிக்கப்பட்டுவிட்டது தமிழ்ச்சங்கத்தின் குறைகளை நீக்கி தமிழ்ப்பண்டித வித்துவான்களை செல்வச் சிறப்புடன் வாழச் செய்தால் தான் தமிழ்மொழி வளர்ச்சியடையும்.

இலங்கையில் எங்கும்தமிழ்ச் சங்கங்கள் தோன்ற வேண்டும். ஒன்றாக இணைய ஒரு தாய்ச் சங்கம் இருக்க வேண்டும், புதிய மரபைப் படைத்து பழைய மரபைக் காத்தல் தமிழ்ச்சங்கத்தின் கடமையாகும்.

திரு. கா. பொ. இரத்தினம் நன்றி தெரிவிக்கும்போது; தமிழைப் பேணிவளர்த்த மதுரைத் தமிழ்ச்சங்க வழிச் தமிழ்ச்சங்கம் தோன்றித் தமிழ்த் தொண்டாற்றி வருவதைப் பாராட்டுகிறேன், அரசியல் நாட்டைச் சிறப்பிப்பதற்கு அடிப்படை ஆகையால் நான் அரசியலில் ஈடுபட்டுள்ளேன். தொல்காப்பியர் வள்ளுவர் போன்றோர் எவ்வளவு சிறந்த அரசியல் மேதைகளாக விளங்கினர் என்பதை அந் நூல்களை நுகர்வோர் காண்பார்கள்: தமிழ்ப்பண்டிதர் புலவர் வித்துவான்களுக்கு பட்டதாரிச் சம்பளம் கொடுப்பதற்கு கல்விமந்திரியுடன் தொடர்பு கொண்டுள்ளேன். அது விரைவில் நிறைவேற்றப்படும் என நம்புகிறேனென்று கூறினர்.

திரு. சீனிவாசகம் பேசும்போது பின்வருமாறு கூறினர்: கருத்தொருமித்தாம்தமிழைக் காக்கவேண்டும். புத்தம் புதிய கலைகளை தமிழில் வளர்க்க வேண்டும். தமிழ் வகுப்பு, தமிழ் ஆய்வு நடாத்தவேண்டும் என்ற நோக்கத்தோடு தமிழ்ச் சங்கம் நிறுவினோம். எங்கள் பணியைச் செய்யவே எம் முன்முன்னோர் தமிழை நுகரவே சங்கம் வைத்தோம். ஒவ்வொரு தொகுதிதோறும் தமிழ்ச் சங்கம் நிறுவினால் தமிழை அழிக்கவோ அகற்றவோ முடியாது." வேல்முருகன், நவரத்தினம், ஆறுமுகம் சின்னத்தம்பி, மயில்வாகனம், சபாபதி உட்பட பலர் உரை நிகழ்த்தினர். திரு. க. முருகேசன் நன்றியுரை கூறினர்,

## "குருகுலக் கல்வியின் முக்கியத்துவம்"

உடுப்பிட்டி, திங்கள்

பண்டிதர்களாக இருந்தாலென்ன புலவர்களாயிருந்தாலென்ன அல்லது வேறு எத்துறையில் சிறந்தவர்களாயிருந்தாலும் அவர்களின் படைப்புக்களில் புலமையின் நாற்றத்தைக்கூட நுகரமுடியவில்லை. பழைய புலவர்களில் காண்கின்ற கருத்து நுட்பத்தையோ அல்லது நளினத்தையோ இன்றைய படைப்புக்களில் காணமுடியவில்லை, குருகுலக் கல்விமுறையொன்றின் மூலம் தான் இலக்கியப் புலமையை ஏற்படுத்த முடியும். அதற்கான வாய்ப்புக்களை அளிப்பது குருகுலக் கல்விமுறையே என்று நிச்சயமாகச் சொல்லலாம்" என்று வாணிகலைக்கழக வல்வெட்டிக்கிளையை வல்வெட்டி வன்னிச்சியம்மன் கோவிலடியில் ஆரம்பித்துவைத்த கழக இயக்குனர் பண்டிதர் திரு. க. வீரகத்தி பேசுகையில் கூறினர்.

## பாலத்தை திருத்தப்போய்...

வவுனியா, திங்கள்

வவுனியாவிலிருந்து சில மைல் தூரத்திலுள்ள தாண்டிக்குளத்தில் பாலமொன்றைத் திருத்தும் வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதனால் போக்குவரத்துக்காக தற்காலிகமானபாதையொன்று அருகாமையில் அமைக்கப்பட்டது. இப்பொழுது இந்தப் பாதையும் சீர்கேடாகி, போக்குவரத்துகள் தடைப்பட்டுள்ளன.

தற்காலிகமான பாதைவழியாக "புல்டோஸர்" ஒன்று சென்றதில் அது மண்ணுக்குள் புதைந்துகொண்டது இதனால் திருக்கோணமலை, அநுராதபுரம், மன்னார் ஆகிய இடங்களுக்கான போக்குவரத்துகள் பலமணிநேரம் தடைப்பட்டன.

## புதிய நிர்வாகிகள்

சுழிபுரம், திங்கள்

சுழிபுரம் கிழக்கு வீரபத்திரர் சனசமூகநிலைய வருடாந்தக்கூட்டம் நேற்று முன்தினம் சங்க வாசிகசாலை மண்டபத்தில் நடைபெற்றது வருவோர் உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்- மு. சிவராசா, உபதலைவர் சு. சண்முகம், செயலாளர்- மு, பத்மநாதன், உபசெயலாளர்- கி. கமலநாதன், தனாதிகாரி- ஞ. பொன்னுத்துரை. நிர்வாக சபையினரும் தெரிவு செய்யப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாணவர் மலர்



சிரிக்க ஒரு கதை

## பிடி பந்தயம்!

குமார் நூனபால் —

தனது பன்னிரண்டு வயது ள்ள கண்ணனைக் கையில் பிடித்தபடி அந்தப்பாடசாலையின் தலைமை ஆசிரியர் அறைக்குச் சென்ற பொன்னையா, தலைமை ஆசிரியரிடம்...

"ஐயா! என் மகனை உங்கள் பாடசாலையில் சேர்க்கலாமெல்று கூட்டி வந்தேன்..." என்றார்.

"ஓ—தாராளமாகச் சேர்த்து விடுங்கள்" என்றார் தலைமை ஆசிரியர்.

சிறிதுநேரம் சிந்தித்தபொன்னையா 'ஐயா! என் மகன் படிப்பில் நல்ல கெட்டிக்காரன்; ஆனால் அவனிடம் ஒரே ஒரு கெட்ட பழக்கந்தான் உண்டு அதை நீங்கள் தான் திருத்தி எடுக்க வேண்டும்" என்றார்.

'நீங்கள் ஒன்றிற்கும் கவலைப்படாதீர்கள் நான் எத்தனையோ பிள்ளைகளைத் திருத்தி எடுத்திருக்கிறேன்... சரி, சரி அந்தக் கெட்ட பழக்கம் என்னவென்று சொல்லவில்லையே!" என்றார்.

"பிரமாதமாக ஒன்றுமில்லை எடுத்ததற்கெல்லாம் பந்தயம் பிடிப்பான் அவ்வளவுதான்"

"ப்பூ... இவ்வளவுதானா கவலையை விடுங்கள் கிம்மதியாக விடுசெல்லுங்கள் இவனைத் திருத்தி எடுப்பது என் பொறுப்பு" என்றார் தலைமை ஆசிரியர். ? ? ?

இரண்டு வாரங்கள் கழிந்த பின் கண்ணனைத் தனது அறைக்கு அழைத்தார் தலைமை ஆசிரியர், கண்ணன் அவர் அறைக்குள் நுழையும் போதே,

"சேர்! இதற்குமுன்பு வேறு எங்கோ பார்த்த ஞாபகமாக இருக்கிறது" என்றான்.

"எங்கே பார்த்தாய்!"

"போனமாதம் ஒருநாளிற்றுக்கிழமை மவுண்ட்லவினியாக் கடற்கரையில் குளித்துக்கொண்டிருக்கும் போது கண்டேன்"

"இருக்கமுடியாது போன மாதம் முழுவதும் நான் யாழ்ப்பாணத்தில் தானே இருந்தேன்" என்றார் தலைமை ஆசிரியர்.

"நிச்சயமாகச் சொல்லுகிறேன் போனமாதம் நீங்கள் அங்கு இருந்தீர்கள், வேண்டுமானால் என்னோடு பந்தயம் பிடியுங்கள் உங்கள் வலது தோள் பட்டையில் ஒருசத அளவிற்கு ஒரு மச்சம் இருக்கிறது" தலைமை ஆசிரியருடன் பந்தயம் பிடித்தான் கண்ணன்

"சரி எவ்வளவு பந்தயம்?"

"ஐந்து ரூபாவுக்கு சேர்"

தலைமை ஆசிரியர் உடனே தன் சட்டையை கழற்றிக்காண்பித்தார். அங்கே ஒருவிதமான மச்சமும் இல்லை. கண்ணன் தனது தோல்வியை ஒப்புக்கொண்டு ஐந்து ரூபாவை தலைமை ஆசிரியரிடம் கொடுத்துவிட்டு வகுப்புக்குப் போய் விட்டான்.

அடுத்தநாள் தலைமை ஆசிரியர் பொன்னையாவுக்கு ஒரு கடிதம் எழுதினார் கண்ணன் தன்னோடு பந்தயம் பிடித்தது பற்றியும் தான் சட்டையைக் கழற்றிக் காண்பித்து தோல்வியை ஒப்புக் கொண்டு ஐந்து ரூபா இழந்ததைப் பற்றியும் விபரமாக எழுதினார். இரண்டுநாள் கழிந்து பொன்னையாவிடம் இருந்து வந்த பதிலை வாசித்ததும் தலைமை ஆசிரியர் வியர்த்து விறுவிறுத்து அப்படியே சாய்ந்துவிட்டார். பொன்னையா எழுதியது இதுதான்:

"தலைமை ஆசிரியர் அவர்கட்கு; நீங்கள் என்ன காரியம் செய்துவிட்டீர்கள் நான் அவனை உங்கள் கல்லூரியில் சேர்க்க அழைத்துவரும்போதுவழியில் உங்கள் சட்டையைக் கழற்றிவைப்பதாக பத்து ரூபா பந்தயம் பிடித்திருக்கிறேன்....."

## மூளைக்கு வேலை

கடைசியாக இப்பகுதியில் கேட்கப்பட்ட கேள்விக்கு ஏராளமானவர்கள் விடையெழுதியிருந்த பொழுதிலும் சரியான விடையை மிகவும் குறைவான தொகையினரே அனுப்பியிருந்தனர். இதன்காரணமாக சரியான விடைக்குடன் சமாரான விடைகளையும் பொறுக்கி எடுத்து அந்த விடைகளை எழுதியவர்களின் பெயர்களையும் இங்கு வெளியிடுகின்றோம். ஒரு விஷயம்: அரைவாசிக்கு மேற்பட்டவர்கள் பிழையாகவே விடையெழுதியிருந்தனர் என்பதையும் அவர்களின் பெயர்கள் இங்கு இடம்பெறவில்லை என்பதையும் உங்களுக்குச் சொல்லிவைக்க விரும்புகின்றேன்.

கடைசியாக கேட்கப்பட்ட கேள்வியின் விடைகள் (1) 8 அரசாங்கங்கள் (2) ராஜாங்க அமைச்சு.

போட்டியில் கலந்துகொண்ட எல்லோருக்கும் எமது பாராட்டுதல்கள். சரியான விடையெழுதியவர்களின் பெயர் வருமாறு:

ஜெயக்குமார், பருத்தித்துறை; மா. வயிரவநாதன், விபாரிமூலை; அ. ரமணி, சு. இராசமணி, தெல்லி வடக்கு; விபா சிறிதரன், கரவெட்டி; சண்முகம் குணநாயகி, உரும்பராய் கிழக்கு; வி. சண்முகராஜா, கோப்பாய்; மா. செல்லக்கண்டு, வட்டுக்கோட்டைகிழக்கு; ச. சிவராசா, பண்ணாகம் தெற்கு; க. முருகேசம்பிள்ளை, சழிபுரம்; ஈஸ்வரி, மூளாய்; புவனேஸ்வரி வேலுப்பிள்ளை, கைதடி; வ. செல்வத்துரை, பருத்தித்துறை; கு. தெய்வநாயகி, சூராவத்தை; க. இரத்தினகுமார், க. சந்திரகுமார், சொக்குவில்; சூர. குகதாசன், மாவிட்டபுரம்; கே. இந்திராணி, நல்லூர்; தி. குகதாசன், கொய்யாத்தோட்டம்; க. கிருஷ்ணபுவனவதி, வண்ணார்பண்ணை; ஆர். முருகானந்தன், உடுவில்; அ. கனகசூரியர், அரெழுமேற்கு; இரா. பாஸ்கரன், கோண்டாவில் வடக்கு; ஆர். அமிர்தநாயகம், கெடுசிறு; சி. கார்த்திகேயலிங்கம், மாதனை; ஏ. நடராசா, பண்டத்தரிப்பு; லேசி அல்போன்சியா செல்வராணி ஞானப்பிரகாசம், அல்வாய் தெற்கு; வெ. செல்லத்துரை, சிறுப்பிட்டி தெற்கு; த. திருநாவுக்கரசு, சங்கானை; ஆ. மகேஸ்வரி, சங்கானை கிழக்கு; ஐ. முருகையா, சூராவத்தை; ச. பூலோகநாதன், கொய்யாத்தோட்டம்; தி. சிவநாதன், பண்ணாகம்; தி. இரத்தினசபாபதி, இணுவில்; மா. சதாசிவம், தென்புலோலி; த. தவமணி, திருநெல்வேலி கிழக்கு; வி. கந்தராஜன், கரவெட்டி; க. தவராசா, சூராவத்தை; மா. சிவபுண்ணியம், வராதவத்தை; சி. திலகவதி, சங்கானை; க. இரத்தினகுமார், சுழிபுரம் கிழக்கு; கே. ஜெயகந்தரம், இணுவில்; ஜெ. சரோஜா, நல்லூர் தெற்கு; மு. ஜெயபாலன், விபாரிமூலை; பூ. தயானந்தன், கந்தர்மடம்; ம. இளங்கோ, கரவெட்டி; க. சத்தியேஸ்வரி, மாவிட்டபுரம்; தி. கணேசமூர்த்தி, வாதரவத்தை; அ. ஜோசப், இளவாலை; ஜி என். செல்வேந்திரன், யாழ்ப்பாணம்; ஆர். விநாயகமூர்த்தி, மாவிட்டபுரம்; க. விவேகானந்தன், கரவெட்டி; கி. முருகதாசன், வட்டுக்கோட்டை; கி. கோகுலபாலன், வட்டுக்கோட்டை; எஸ். அருள்தாஸ், புன்னாலைக்கட்டுவன்; இளையதம்பி சிவராசா, மயிலிட்டி தெற்கு; வ. சிவகுருநாதன், கைதடி; வை. முருகையா, அளவெட்டி; வே. பாலசுப்பிரமணியம், காரைநகர்; ஆ. சிவலிங்கம், அல்வாய் மேற்கு; தே. தேவநந்தகுமார், ஏழாலைவடக்கு; தே. தேவபுஷ்பம், ஏழாலை வடக்கு; க. செந்தில்செல்வன், நல்லூர்; நா. செல்லத்தம்பி, சொக்குவில் மேற்கு; க. செல்வராஜன், வவுனியா; எஸ். நாகலிங்கம், உடுப்பிட்டி; ஜெயா-சபா, மல்லாகம்; சி. சிவதேவி, விபாரிமூலை; மு. ஜெயதர்சினி, பருத்தித்துறை; வ. கார்த்திகேசு, மட்டுவில் தெற்கு; இ. ருபசாந்தி, மட்டக்களப்பு; மு. கதிர்காமநாதன், கொடிகாமம்; கே. மயில்வாகனம், கைதடி; க. வேலுப்பிள்ளை, கைதடி வடக்கு; க. கனகரத்தினம், சித்தங்கேணி; க. திருக்கணேசன், வதிரி; இ. இரவீந்திரகுமார், நல்லூர் தெற்கு; சபா, புஷ்பநாதன், கன்னாகம்; வை. ஜெயபாலன், தெல்லிப்பளை மேற்கு; செளரி, அம்பிகா, கோண்டாவில் வடக்கு; சி. கார்த்திகேசு, தும்பளை; சு. நல்லைநாதன், கல்வியங்காடு; சி. மோகன்தாஸ், சண்டிலிப்பாய்; சோ. குகதாசன், இடைக்காடு; உ. சுப்பிரமணியம், யாழ்ப்பாணம்; ஜே. திருக்குமார், பருத்தித்துறை; ஜே. சிவக்குமார், பருத்தித்துறை; க. அரியமலர், மல்லாகம்; திலி, பவா, சுசந்தி, அருமதி, பரமேஸ்வரி கோண்டாவில் மேற்கு.

### கேள்வி மண்டலம்

இந்த வாரமும் இரண்டு கேள்விகள் இங்கு இடம்பெறுகின்றன. நிதானமாக யோசித்து விடைகளை எழுதுங்கள். உங்களின் விடைகள் எதிர்வரும் சனிக்கிழமைக்கு முன்னதாக எமக்குக் கிடைக்க வேண்டும். விலாசம்: மாணவர் மலர், "ஈழநாடு", த. பெ: 49, யாழ்ப்பாணம். சரி—கேள்விகளைக் கவனியுங்கள்.

(1) கம்பியில்லாத் தந்தியைக் கண்டுபிடித்தவர் யார்? அவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்? (2) மனிதனால் முதல் கண்டுபிடிக்கப்பட்ட உலோகம் எது? —சசிதரன்

அறிவுச் செல்வம்

## திறமையான பசளை நல்ல பலன் கொடுக்கும்

... பொ. கனகநாயகம் ....

எருவை உபயோகிப்பதை முதலில் ஆராய்வோம். வயலுக்கு எருவிடும் விவசாயிகள், ஒவ்வோர் எருவின் தன்மையையும் மண்ணின் தரத்தையும் பொறுத்தே எருவிடவேண்டும். மண்ணுக்கேற்ற பசளை இடாவிடில் மண்ணின் வளத்தைக் கெடுத்தவர்கள் ஆவார்கள். அவர்கள் முக்கியமாக அறியவேண்டிய தன்மைகளாவன: காலகம், பாஸ்பரஸ் பொட்டாசியம் ஆகும். காலகம் செடிகளுக்கு நல்ல பசுமை தருவதோடு அவை துரிதமாக வளர்வதற்கும் முதிர்ச்சியடைவதற்கும் அதிக விளைச்சல் தரவும் மிகவும் தேவைப்படுகின்றது. பாஸ்பரஸ் வேர்கள், தண்டுகள், இலைகள் முதலியன ஆரோக்கியமாக வளர்ந்து முதிர்ச்சியடைவதற்கும், செடியைப் பூமியில் நிலைநிறுத்தவும் உதவும். விதைச்செடிகளில் வேதங்கள் உள்ள வேர் முடிச்சுக்கள் தோன்றவும் இன்றியமையாததாக உள்ளது. மேலும் பொஸ்பரஸ் இன்றேல், அணுப்பிரிவுகளும் மற்றும் உடகளுபுரதப்பொருள் உண்டாவதும் தடைப்பட்டுவிடும். பொற்றாசியத்தின் உதவி கொண்டு தான் தாவரங்கள் பச்சையம் தயாரிக்கின்றன. மேலும் ஒளிச்சேர்க்கை மூலம், கரிநீரகம் மற்றும் உயிரியம் இவற்றை ஒன்றுசேர்த்து மாவுப்பொருள் தயாரிக்கப் பொட்டாசியம்மிகவும்தேவைப்படுகின்றது. இதுமட்டுமன்றித் தாவரங்களைத் தாக்கும் கோய்களையும் பூச்சிகளையும் தாங்கும் வலிமைபெறவும் தவியங்கள் மற்றும் பழங்களின் தரத்தை உயர்த்தவும் மிகவும் உதவுகிறது. வயல்களில் ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து பயிர் செய்வதால் பயிர்கள் நிலத்திலுள்ள சத்தை உறிஞ்சிவிடுகின்றன. இதனால் நிலத்தின் தன்மை குன்றிவிடும். ஆகவே இதற்கேற்ற உரமிடுதல்மிகமிக அவசியம்.

### மாட்டுச்சாணம்.

எல்லா உரங்களிலும் மிகச்சிறந்தது மாட்டுச்சாணமே. இதனால் மண்ணுக்கு ஏற்படும் நற்பயன்கள் பல ஆண்டுகள் நீடித்திருக்கும். இதில் 0. 5 விருந்து 1. 8 சத விதம் வரை காலகச் சத்தும் 0, 4 விருந்து 0. 8 சதவீதம் வரை பாஸ்பாரிக் அமிலமும் 0. 5 விருந்து 1. 9 சதவீதம் சாம்பல் காரமும் 0. 5 விருந்து 4, சதவிதம்வரை சுண்ணாம்புச்சத்தும் உள்ளன.

### கூட்டெரு

இதற்குப் போதியளவு அகலமும் 8 அடி ஆழமுள்ள குழிகளில் குப்பைகூளம் சாணம் சாம்பல் கழிவுப்பொருட்கள் முதலியவற்றைப் போட்டு மூடிவிடவேண்டும். பின் 6 மாதத்தால் இதைப் பாவனைக்கு எடுக்கலாம்: இது மாட்டெரு போன்றே பயன் பயக்கும். ஒரு பங்கு சாணத்திலிருந்து 5 பங்கு எரு தயாரிக்கலாம். வீட்டுக் கழிவுப் பொருட்களை உபயோகிக்கவும் சிறந்த வழி வீட்டுக் கழிவு பொருட்கள், களைகள், புல்பூண்டு, (இதில் போடும் களைகள் சூட்டினால் உகருவதால் மீண்டும் முளைக்காது) லைரமான தடிகள் தவிர்ந்த பயிர் மிச்சம் போன்ற யாவும் பாவிக்கலாம். ஆடு. மாடு போன்றவற்றின் மலசலம் விசேடமானது. மாட்டின்சலம் இதில் லவணம் அதிகமுண்டு. மாட்டுச்சாணி அல்லது மாட்டெரு கிடைக்காவிடில் பச்சை இலைகள் பாவிக்கலாம். மிகச்சிறந்தது காட்டுச் சூரியகாந்தி இது விரைவில் உக்கி பயன் அளிக்கும். இலை

(5-ம் பக்கம் பார்க்க)

## அதிசயம்...

(விந்தையான இந்த உலகினிலே பலவிதமான அதிசயங்கள் இருக்கின்றன. இந்த அதிசயங்களில் சிலவற்றை நாம் முன்னர் அறிந்திருப்போம். சில இப்பொழுதும் நமக்கு வியப்பூட்டுவதாகத் தானிருக்கும்.

இப்பகுதியில் தொடர்ச்சியாக வெளியாகவிருக்கும் பல கட்டுரைகள் உங்களுக்கு மிகுந்த பலனைக்கொடுக்கும் தொடர்ந்து படித்துப் பாருங்கள்.)

### பரிகசிக்கும் பறவை

-க. கனகலிங்கம்-

இப்பறவையின் பெயரே இதன் குணங்களை ஒருவாறு உணர்த்தும். பிறபறவைகளின் தொனிகளைப் போலவே இதுவும் சமயத்திற்கேற்ப கூச்சலிட்டு மாற்றுவதால் இதற்கு இப்பெயர் ஏற்பட்டது. இப்பறவைகள் அமெரிக்காவின் ஐக்கிய மாகாணங்களில் காணப்படுகின்றன. தன்செவிபிற்பட்ட சத்தத்தை போலவே இது ஏற்றத்தாழ்வின்றிச் சத்தமிடும். சில சமயங்களில் காயைப்போல் உறுமிக் குரைக்கும், இச்சத்தத்தைக்கேட்டு பூனை ஓடி ஒளியும் சில சமயம் அஞ்சிக் கூச்சலிடும் இச்சத்தத்தைக் கேட்டு தாய்க்கோழி தன்குஞ்சுகளுக்கு ஆபத்து வந்துவிட்டது என்று ஏமாந்து பரிக்தோடும் காட்டில் வேட்டையாடும் வேடனைக்கூட ஏமாற்றிவிடுகின்றது பல்வேறு பறவைகளின் சத்தத்தைப் போல் பல்வேறு இடங்களிலிருந்து கத்துவதால் தேடி வந்த பறவைகளை காடிபல்வேறு பக்கத்திற்குச் செல்லவேண்டிய நிர்ப்பந்தம் வேடனுக்கு ஏற்படுகின்றது,

இந்தப்பறவையை வீட்டுப் பறவையாக ஆங்கிலேயர் இப்பொழுதும் வளர்த்து வருகின்றனர். இந்தப் பறவை மனிதனைக்கூட ஏமாற்றவல்லது பார்த்தீர்களா!

... ஆறல் உண்மை

### ஞாபகத்துக்கு ஒரு பரீட்சை

—சுகந்தி—

1 கிரகங்களில் பெரியது எது? சிறியது எது?

2 பூமிக்குச் சமீபத்திலுள்ள கிரகம் என்ன?

3 இலெட்பென்சில் எதனால் செய்யப்படுகின்றது?

4 கட்டாவிரம் பட்டாவிரம் என்பது எம்மரத்தை?

5 1910-ம் ஆண்டில் தோன்றிய வால்வெள்ளியின் பெயர் என்ன?

6 வெண்கல மாளிகை யாரால் கட்டுவிக்கப்பட்டது?

7 பூனை எத்தனை மாதங்களில் குட்டியீனும்?

8 பூவாது காய்க்கும் மரங்களெவை?

9 எரிமலை தீ கக்குவதற்குக் காரணம் யாது?

இதோ விடைகள்

1 பெரியது வியாழன், சிறியது புதன்.
2 செவ்வாய்.
3 சாரியம் அல்லது கிராபைட் என்னும் உலோகம்.
4 பனை.
5 ஹலிஸ் வால்வெள்ளி.
6 துட்டகைமுனு என்பவரால்.
7 மூன்று
8 பலா, அத்தி, ஆல்.
9 பூமியினுள்ளிருக்கும் நெருப்புக் குழம்பு அடைவதால்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவு, விவசாய மகாநாடு நுவரேலியாவில் ஆரம்பம்

கொழும்பு, திங்கள்

உணவுவிவசாய ஸ்தாபன மகாநாடு காலையதினம் நுவரேலியாவில் ஆரம்பமாகிறது. உணவுவிவசாயமந்திரி திரு. எம். டி. பண்டா ஆரம்பித்து வைக்கும் இந்த மகாநாட்டில் இந்தியா, துருக்கி, தாய்லாந்து, நெதர்லாந்து உட்பட பல நாடுகளின் பிரதிநிதிகளும் கலந்துகொள்கின்றனர்.

உலகில் தோன்றியுள்ள உணவு நெருக்கடியைச் சமாளிப்பதற்கு வேண்டிய வழிவகைகளை இம் மகாநாடு ஆராயும்.

இந்த மகாநாடு 17-ம் திகதி வரை தொடர்ந்து நடைபெறும்.

## பஸ் - லொறி மோதல்

சாவகச்சேரி, திங்கள்

அரியாலை சந்திக்கருகாமையில் நேற்று முன்தினம் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்துகொண்டிருந்த லொறியும் யாழ்ப்பாணத்திலிருந்து தாளையடிக்குச் சென்றுகொண்டிருந்த இ. போ. ச. பஸ் ஒன்றும் மோதுண்டதால் லொறியின் முன்பக்கம் பலத்த சேதத்திற்குள்ளாகிற்று. எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

## பாராட்டு

சுழிபுரம், திங்கள்

வட்டுக்கோட்டை எம். பி திரு. அ. அமிர்தலிங்கத்துக்கும் பண்டிதர் கா. பொ. இரத்தினத்துக்கும் ஒரு பாராட்டு விருந்து தமிழ்ச்சங்கத்தினரால் நடாத்தப்பட்டது. பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இவ்விருந்து வைபவத்தில் பல பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

## தமிழரசுக்கட்சிக்கிளை

துணுக்காய், திங்கள்

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் மல்லாவிக் கிளை ஒன்று துணுக்காய் கிராமசபைத் தலைவர் திரு சபாரத்தினம் தலைமையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. இக்கூட்டத்தில் நிர்வாகசபை ஒன்று தெரிவு செய்யப்பட்டது. தலைவர்: திரு. ஆ. சபாரத்தினம், உபதலைவர்: திரு: வே. வடிவேலுப்பிள்ளை, காரியதரிசி: திரு. ம பெனடிற், உப காரியதரிசி: திரு. க. பூராசா, தனாதிகாரி: திரு. க. அமிர்தலிங்கம்.

## யாழ். ஆஸ்பத்திரி மருந்துத் தட்டுப்பாடு

### எம். பி. முறைப்பாடு

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் இருந்துவரும் மருந்துத் தட்டுப்பாடு குறித்து ஊர்காவற்றுறை எம். பி திரு. வி. நவரத்தினம் சுகாதார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியைச் சந்தித்துப் பேசினார்.

மிகவும் ஆபத்தான நிலையிலுள்ளவர்களுக்குக் கொடுக்கப்படும் மருந்தொன்றுக்கு யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் சென்ற சில காலமாக தட்டுப்பாடிருக்கிறதென்றும் பல தந்திகள் மூலம் மருந்து அனுப்பும்படி கேட்டும் பதிலெதுவும் கொடுக்கப்படவில்லையென்றும் எம். பி. நிரந்தரக் காரியதரிசியிடம் சுட்டிக்காட்டினார்.

தேவையான மருந்துகள் உடனடியாக அனுப்பிவைப்பதாக நிரந்தரக் காரியதரிசி எம். பியிடம் உறுதிகூறினார்.


REGAL - JAFFNA
NOW SHOWING
YUL BRYNNER
TONY CORTIS
in
TARAS BULBA
(Panavicion - Color)



கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) ராஜ் (நீர்கொழும்பு)
மொடேர்ன் (பதுளை) விஜயா (மட்டக்களப்பு) வெம்பிளி (கண்டி)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி மாலை 6-30, 9-30





எம். ஜி. ராமச்சந்திரன்
சாவித்திரி
மற்றும் பலர் நடித்த
வேட்டைக்காரன்


# மென்பந்தாட்ட போட்டிகள்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் மென்பந்தாட்ட சங்கத்தினரால் நடாத்தப்பட்ட மென்பந்தாட்டப் போட்டிகளின் முடிவுகள் வருமாறு:-

### 'ஏ' பிரிவு

**யங்லயன்ஸ்**

1-வது இன்னிங்ஸ் — 18 ரன்கள்.

2-வது இன்னிங்ஸ் — 46 ரன்கள்.

**அரியாலை யுனைட்டட்**

1-வது இன்னிங்ஸ் — 15 ரன்கள்.

2-வது இன்னிங்ஸ் — 23 ரன்கள்.

யங்லயன்ஸ் 29 அதிகப்படியான ரன்களால் அரியாலை யுனைட்டடை தோற்கடித்து 'ஏ' பிரிவில் சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

### 'பி' பிரிவு

**சென். ஜோசப்**

1-வது இன்னிங்ஸ் — 139 ரன்கள்.

**எடிக்கேசன்**

1-வது இன்னிங்ஸ் — 37 ரன்கள்.

2-வது இன்னிங்ஸ் — 42 ரன்கள்.

சென். ஜோசப் இன்னிங்ஸாலும் 60 ரன்களாலும் எடிக்கேசனை தோற்கடித்தது.

### 'ஸி' பிரிவு

**கிறீன்பீல்**

1-வது இன்னிங்ஸ் — 49 ரன்கள்.

2-வது இன்னிங்ஸ் — 87 ரன்கள்.

**ரவஸ்**

1-வது இன்னிங்ஸ் — 44 ரன்கள்.

2-வது இன்னிங்ஸ் — 89 ரன்கள்.

கிறீன்பீல், ரவஸ் விளையாட்டுக் கழகத்தை 60 அதிகப்படியான ரன்களால் வெற்றி பெற்றது.

## புதிய அதிபருக்கு வரவேற்பு

கொழும்புத்துறை, திங்கள்

"கத்தோலிக்க கலாசாலையாக இருந்த இக் கலாசாலையை அரசாங்கம் எடுத்த போது முதன் முதல் அதிபராக வந்தவர் திரு. கனகலிங்கமே. இவர் இளைப்பாறுவதால் இவரது இடத்துக்கு அட்டாளைச்சேனை அரசினர் கலாசாலையில் உப அதிபராகக் கடமையாற்றிய திரு. வி. எஸ். விசுவலிங்கம் வந்திருக்கிறார். ஆசிரியர்களைப் பயிற்றுவதில் போதிய அனுபவம் வாய்ந்த பயிற்றப்பட்ட பட்டதாரியான இவரை நாம் மனப்பூர்வமாக வரவேற்கின்றோம்" என்று கொழும்புத்துறை அரசினர் ஆசிரிய கலாசாலைக்குப் புதிய அதிபராக வந்திருக்கும் திரு. வி. எஸ். விசுவலிங்கத்துக்கு பேராசிரியர்களாலும் ஆசிரிய மாணவர்களாலும் மேற்படி கலாசாலை உப அதிபர் திரு. வி. ஆ. சிங்கலல தலைமையில் நடைபெற்ற வரவேற்புபசாரக் கூட்டத்தில் வரவேற்புரை நிகழ்த்திப் பேசிய தலைமைத் தமிழ்ப் பண்டிதர் பேராசிரியர் திரு. க. இராசையா கூறினார். புதிய அதிபராக வந்த திரு. வி. எஸ். விசுவலிங்கம் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி கூறினார். முடிவில் சிற்றுண்டி விருந்துபசாரம் இடம் பெற்றது.

## விளையாட்டுப் போட்டி

சுழிபுரம், திங்கள்

மாதகல் மேற்கு சனசமூக நிலைய வருடாந்த விளையாட்டுப் போட்டியில் அநேக சிறுவர்கள் கலந்துகொண்டனர். போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு திரு. சி. நல்லையா பரிசில்கள் வழங்கினார்.

# சங்கானைப் பட்டினசபை

### கேள்விப்பத்திர அறிவித்தல்

1965-ம் ஆண்டு வைகாசி மாதம் 21-ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணி வரையும் கீழ்க்காணும் வேலைகளுக்கு கேள்விப்பத்திரங்கள் ஏற்கப்படும். கேள்விப்பத்திரங்கள் வைகாசிமாதம் 20-ம் திகதி வியாழக்கிழமை பகல் 12 மணி வரை கொடுக்கப்படும். கட்டுப்பணம் ரூபா 15-00ம் பத்திரப்பணம் ரூபா 5-00ம் கட்டியதன் பேரில் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

ஏனைய விபரங்கள் பட்டினசபைக் காரியாலயக் கந்தோர் நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

1. மருதவை ஒழுங்கை,
2. விக்கினேஸ்வர வித்தியாசாலை ஒழுங்கை.
3. ஓடைக்கரை ஒழுங்கை.
4. விளாவெளிச் சுடலை மடம் திருத்துதல்,
5. மீன் சந்தை திருத்த வேலை.
6. சாந்தனுவத்தை திருத்த வேலை.

கு. அம்பலவாணர்,
தலைவர்,
பட்டினசபை, சங்கானை
பட்டினசபைக் காரியாலயம்,
சங்கானை.
8-5-1965 169

## கேள்வி விளம்பரம்

### சுன்னாகம் பட்டணசபை

1965-ம் ஆண்டு மே மாதம் 22-ம் திகதி காலை 10 மணிக்கு முன் அனுபவம் வாய்ந்த கொந்தராத்துக்காரரிடமிருந்து தொழிலாளர்களுக்கு ஒன்பது வீடுகள் அமைப்பதற்கு, சீல் வைத்த கேள்விகள் சுன்னாகம் பட்டணசபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

1965-ம் ஆண்டு மே மாதம் 21-ம் திகதி பிற்பகல் 3 மணி வரை வைப்புப்பணமாக ரூபா 100-00ம், பத்திரப்பணமாக ரூபா 5-00ம் செலுத்தி கேள்விப்பத்திரம் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரத்திற்காகக் கட்டும் ரூபா 5-00ம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

ஏனைய விபரங்கள் யாவும் சுன்னாகம் பட்டணசபைக் காரியாலயத்தில், கந்தோர் நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

பொ. நாகலிங்கம்,
தலைவர்,
பட்டணசபை,
சுன்னாகம்.
பட்டணசபை, அலுவலகம்,
சுன்னாகம்.
7-5-65 170

## திறமையான...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் கூடியளவு பயன்படுத்த வேண்டும். அதாவது 1/3 பசுங்குழைகளாயிருத்தல்வேண்டும். இதில் காலகச் சத்து 0. 4 லிருந்து 0, 8 சத வீதமும், பாஸ்பரிக்காடி 0. 1ல் இருந்து 0, 5 சதவீதமும் சாம்பல் காரம் 0, 7 லிருந்து 1 சத வீதம்வரை உள்ளது.

**பசுந்தாட் பசளை**

மண்ணில் சேதனவுறுப்பு பொருளைக் கூட்டுவதற்காகச் செடிகள் பயிராக்கப்பட்டு உழுது நிலத்துள் புதைக்கின்றனர். அவரைச் செடிகளை இவ்வாறு பயிரிட்டு நிலத்துட் புதைத்தால் மண்ணில் நைதரசச்சத்து கூடும். இதில் 0. 7 சதவீதம் காலகச்சத்து உள்ளது இது நெற்பயிருக்கு மிகுந்த நன்மையைப் பயக்கிறது.

**பயிரின் உணவுகள்**

லவணம் பிரகாசிதம், சாம்பற்காரம் என்பன: மாட்டெரு கூட்டெரு பசுந்தாட்பசளை தோற்பழிவு எலும்புத் தூள் லவணம் என்ற எருக்களிலும் உண்டு. பிண்ணாக்கு பசுந்தாட்பசளையிலும் கூட்டெருவிலும் லவணம் அதிகமுண்டு. (தொடரும்)

# வட அளவை சனசமூகநிலையம்

முன்பு அறிவித்தபடி 9-5-65ல் நடைபெற்ற அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பின் முடிவு விபரங்களை இதன் மூலம் அன்பர்களுக்குத் தெரியத் தருகிறோம்.

1-ம் பரிசு இல: 2095.
ம. கதிரவேல், தம்பாலைகலட்டி, அளவெட்டி.

2-ம் பரிசு இல: 997.
க ரஞ்சிதகுமார், தம்பாலை கலட்டி அளவெட்டி.

3-ம் பரிசு இல: 59
A சூரியகுமார், அரசல்தான், அளவெட்டி.

நிர்வாகசபையினர்.
10-5-65 171

### தேவை

அனுபவம் வாய்ந்த 'எலக்றிக் வெல்டர்' தேவை. நேரில் விண்ணப்பிக்கவும், K. சிவநேசன், வை எம் சி ஏ, சண்டிக்குளி. 248

### விற்பனைக்கு

நல்ல பாவனையிலுள்ள டீசல் என்ஜின் நான்கு சிறைண்டர்கள் ஒரு லைலர் மோட்டர் பாக்கிங்மெஷின் விற்பனைக்குண்டு. விபரத்திற்கு: ராஜா மில்ஸ், துறைமுகவீதி, பருத்தித்துறை. 245

கொழும்புத்துறை சாமியார் வீதியில் சுவாமியார் ஆசிரமத்திற்கு மேற்குப் பக்கமாக கிணற்றுடன் கூடிய ஐந்து பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. மு. ஆறுமுகம், செட்டியாமடம், வடடுக்கோட்டை, என்ற விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். 240

**தொய்வு, கசம், நீரிழிவு, வெள்ளை முதலிய பல** கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய சுற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சைபெற்று வியக்தன்னர், வைத்தியர் புவிராஜசுந்தர், கைலாசபிள்ளையார்கோவிலடி, யாழ்ப்பாணம்.

### தேவை

பத்திரிகை அலுவலகமனேஜராக (Manager) கடமைபுரியக் கூடியவர் உடனே தேவை. மாதச்சம்பளம் ரூபா 150/- டிபோசிட் பணம் ரொக்கம் ரூபா 1500/- செலுத்த வேண்டும் நற்சான்றுப் பத்திரங்களுடனும் டிபோசிட் பணத்துடனும் 12-5-65 காலை நேரில் சமுகமளிக்கவும். தகுதியானவர் உடன் நியமிக்கப்படுவர். உரிமையாளர், தமிழ் நேசன் பத்திரிகை அலுவலகம், 80, பேஸ்ஷால் வீதி, யாழ்ப்பாணம். 249

## வானொலி நிகழ்ச்சிகள்

### செவ்வாய் 11-5-65

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-15 பகல் 12-45, மாலை 6-00 இரவு 9-00.)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6 55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-00 கதிப்பாடல்கள், 7-30 மெல்லிசை, 7-45 தேர்ந்த இசை, 8-15 இலங்கை மிஷன் கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-45 திரை இசை.

இரவு 6 15 கிராமசஞ்சிகை, 6-45 ஸ்ரீலங்கா குறுக்கெழுத்துப்போட்டி, 7-00 வயலின், 7-30 மத்தாப்பு — "சாரு", 8.00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 நேயர் விருப்பம், 9-45 நாதஸ்வரம் — வி. கோதண்டபாணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாவற்குழிக்கு வீடமைப்புத் திட்டம்

### மந்திரி வாக்குறுதி

யாழ்ப்பாணம், திங்கள்

இப்பகுதி மக்களது கஷ்டங்களைத் தாம் உணர்வதாகவும் குடியிருப்பதற்கு காணியில்லாமல் கஷ்டப்படும் மக்களுக்கு இப்பகுதியில் சுவீகரிக்கப்படவிருக்கும் 97 ஏக்கர் நிலத்திலிருந்து ஒவ்வொருவருக்கும் 6 பரப்புக் காணி கொடுப்பதற்கான நடவடிக்கைகளைத் தாம் செய்து தருவதாகவும் நேற்று நாவற்குழிக்கு விஜயஞ்செய்த தொழில் வீடமைப்பு மந்திரி ஐஆப் முகமது தெரிவித்தார்.

வட இலங்கை வீடமைப்புச் சங்க [illegible]ணையாளர்கள், அங்கத்தவர்கள் மற்றும் நாவற்குழி மக்களும் தொழில் வீடமைப்பு மந்திரியையும், தேசிய சேவைப்பகுதி மந்திரியையும் வரவேற்றார்கள்.

"இப்பகுதியில் வீடமைப்புத் திட்டத்தை வெற்றிகரமான முறையில் அமைத்துக் கொடுப்பேன். இப்படியான முறையின் மூலம் வீடுகள் பற்றாக்குறை ஓரளவு தீருமென எண்ணுகிறேன்" என்று வீடமைப்பு மந்திரி குறிப்பிட்டார்.

## நல்லூரில் ஒரு அசம்பாவிதம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

தொழில் வீடமைப்பு மந்திரி திரு. எம். எச். முகம்மதுவுக்கும், தேசிய சேவைகள் மந்திரி திரு. வி. ஏ. சுகததாசாவும் நேற்று உடுப்பிட்டிக்குச் செல்லும் வழியில், அவர்கள் வருவதற்கு சற்று முன்பாக நல்லூரில் சிறிய அசம்பாவிதம் ஏற்பட்டதாகத் தெரிகிறது.

நல்லூரில் சில முக்கிய இடங்களில், குறிப்பாக மார்க்கெட்டையும் அதைச் சேர்ந்த இடங்களையும் அடுத்து கட்டப்பட்டிருந்த இரு கட்சிக் கொடிகள் இதற்குக் காரணமாக அமைந்ததாகக் கூறப்படுகிறது. தமிழரசுக்கட்சி, தமிழ்க் காங்கிரஸ் கட்சி ஆகியவற்றின் ஆதரவாளர்கள் பரஸ்பரம் இந்தக் கொடிகளை அகற்றும் முயற்சியில் ஈடுபட்டதாயும், சிறிய கைகலப்புகள் நடைபெற்றதாயும், கொடிகள் மீது கற்கள் வீசப்பட்டதாயும் உடன் பொலிஸார் தலையிட்டு இரு கட்சிக்காரர்களுக்குமிடையே சமரசத்தை உண்டாக்கினரென்றும் தெரிகிறது.

இரு மந்திரிகளும் இவ்வழியாகச் செல்லுவதற்கு முன்பே இச்சம்பவம் ஏற்பட்டது.

மந்திரிகளை வரவேற்கும் முறையில் இக்கொடிகள் கட்டப்பட்டிருந்தன. ஆனால் மந்திரிகள் வேறு வழியாக உடுப்பிட்டிக்குச் சென்றனராம்.

## திடீர்ச் சுகவீன கடிதம்

காங்கேசன்துறை, ஞாயிறு

காங்கேசன்துறை புகையிரத எஞ்ஜின் செட்டில் வேலைசெய்யும் சுமார் 50 தொழிலாளர்கள் திடீரெனச் சுகவீனமென கடிதம் கொடுத்து விட்டு வேலைக்கு வராமல் விட்டுவிட்டார்கள். இதனால் அநுராதபுரத்திலிருந்து தொழிலாளர்கள் வேலைக்கு வரவழைக்கப்பட்டனர்.

இதனால் ஒரு புகையிரத சேவையாவது ரத்துச் செய்யப்படவில்லை. ஆனால் காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலைக்கு களிமண் ஏற்றிவந்த புகையிரத சேவை இரண்டு நாட்களாக நடைபெறவில்லை. இந்த சுகவீனக் கடிதத்திற்கு காரணம் அவர்களது லொக்கோ போர்மனின் கடுமையான கட்டவடிக்கையே எனத் தெரியவருகின்றது.

## புதுவருட நிர்வாகிகள்

பளை, திங்கள்

அண்மையில் நடைபெற்ற வணாங்கேணி - தம்பகாமம் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பலநோக்குச்சங்கம் அபிவிருத்தி குறித்தும் சங்கப் பண்டகசாலையின் முன்னேற்றம் பற்றியும் திரு. ச. சின்னத்துரை விளக்கிப் பேசினார். மேற்படி கூட்டம் வணாங்கேணி கிராமமுன்னேற்றச்சங்கக் கட்டிடத்தில் நடைபெற்றது. புதுவருட உத்தியோகத்தர் விபரம் வருமாறு:

தலைவர்: திரு. ச. சின்னத்துரை, உபதலைவர்: திரு. வே. சின்னத்தம்பு, காரியதரிசி திரு. மு. செ. அமரசிங்கம். நிர்வாகசபைஉறுப்பினர்: திரு கா. சோமசுந்தரம், திரு சி. அப்பையா, திரு. இ. நடராசா, திரு. கா. அருணம்பலம், திரு. க. துரைராசா, திரு. வே வேலுப்பிள்ளை, திரு சே செல்வராசா.

## ஆயுர்வேத மாணவருக்கு சலுகைகள்

கொழும்பு, திங்கள்

ஆயுர்வேத கலவி பயிலும் மாணவர்களின் நலனை உத்தேசித்து, இவர்களுக்குப் போதியளவு சலுகைகள் வழங்க சுகாதார மந்திரி முன்வந்துள்ளார்.

வார்டுகளையும், விடுதிகளையும், நூல் நிலையங்களையும் திறந்து மேலதிகக் கட்டடங்களையும் இந்த மாணவர்களுக்கு அமைத்துக் கொடுக்க சுகாதார மந்திரி முடிவு செய்துள்ளார்.

## மீனவர்க்கு புனர்வாழ்வு

சுன்னாகம், செவ்.

அண்மையில் வீசிய சூறாவளி காரணமாக மீனவரின் இன்னல்களை தீர்க்க வடமாகாண அரசாங்க அதிபர் சமூகசேவை அமைச்சர் அசோககுணரத்தினவுடன் கலாத்திய மகாநாட்டில் மேலதிக நிதி உதவும்படி கேட்டுள்ளார். மந்திரி கனுனாத்திற யாழ்ப்பாணத்திற்கு மிகவிரைவில் விஜயஞ் செய்ய இருக்கிறார் இந்தவிஜயத்தின் பொழுது மீனவருக்கு புனர்வாழ்வு அளிக்க வேண்டிய வழிகளை ஆராய்வார். யாழ்ப்பாண அரசாங்கஅதிபர் கரையோரங்களில் வாழும் மீனவர்களுக்கென இருநூற்றிற்கும் அதிகமான நிரந்தரவாசஸ்தலங்களை அமைக்க உதவும் படி பலதொண்டர் ஸ்தாபனங்களைக் கேட்டுள்ளார்.

## சிறப்பாக கொண்டாடப்பட்டது

கொஸ்லாந்தை, திங்கள்

கொஸ்லாந்தை மீரியபெத்தை தோட்டத்தில் லங்கா தோட்டத் தொழிலாளர் சங்க சார்பாக மேதினம் வெகுசிறப்பாக கொண்டாடப்பட்டது. தோட்ட வைத்தியசாலையிலிருந்து புறப்பட்ட ஊர்வலம் இரண்டுமணி நேரத்திற்குப் பின் கோவிலை அடைந்து ஓர் பொதுக் கூட்டத்தை நடத்தியது. மேதினத்தின் வலிமையை எடுத்துரைக்கும்முகமாக சங்க தலைவரும் காரியதரிசியும் சொற்பொழிவுகள் நடத்தினர். கொஸ்லாந்தை சுற்றுப்புற தோட்டங்களான கொஸ்லாந்தை, மொனராங்கலை, கபரகலை, பூனாகலை ஆகியதோட்டங்களிலும் மேதினம் வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது.

## 'குடியிருக்கும் காணி சொந்தமாகும்'

### சிறுபான்மைத் தமிழருக்கு மந்திரி வாக்குறுதி

பருத்தித்துறை, திங்கள்

"வீட்டுப்பிரச்னை இலங்கை முழுவதற்கும் பொதுவானதாக இருந்தபோதிலும் கரவெட்டி கிழக்குப் பகுதியில் வாழும் சிறுபான்மைத்தமிழர்களுக்கான வீடு கட்டும் திட்டமொன்றை விரைவில் நிறைவேற்றி வைப்பேன். நீங்கள் வசிக்கும் குடிசைகள் மிகவும் கேவலமான முறையில் இருப்பது துக்கமும் வெட்கமுமான விஷயமாகும். நீங்கள் குடி இருக்கும் காணிகள் பற்றித் தெரிவித்த விஷயம் எனது முதலாவது கவனத்தில் இருக்கிறது. குடி இருக்கும் காணியின் உரிமையாளர்களிடம் இருந்து உங்களுக்கு அக்காணிகளைச் சொந்தமாக்கித் தரும் பணியை இந்த வாரத்திலேயே ஆரம்பிப்பேன். அது உங்கள் உரிமையாக விரைவில் மாறும்".

இவ்வாறு வீடமைப்புத் துறை அமைச்சர் ஐஅப் எம். எச். முகமது, கரவெட்டி கிழக்குச் சிறுபான்மை தமிழர்களின் வசிப்பிடங்களைப் பார்வையிடச் சென்றபோது அங்கிருந்த மக்கள் மத்தியில் பேசுகையில் கூறினார்.

தேசியசேவைகள் அமைச்சர் திரு. வி. ஏ. சுகததாசாவும் சமூகம் அளித்திருந்தார். இரு அமைச்சர்களையும் உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரத்தையும் வாலிபர்கள் மலர்மாலை சூட்டி வரவேற்றனர்.

ஐஅப் முகமது தொடர்ந்து பேசுகையில், "குடிசைகள் தோறும் சென்று மார்க்சிய வாதிகள் பொய்ப்பிரசாரம் செய்து வருகிறார்களென்றும் அவர்களை நம்பவேண்டாமென்றும் கூறினார். ஏழைகளின் வாழ்வில் புதிய மறுமலர்ச்சியை, சுபிட்சத்தை எமது கட்சி, தேசிய அரசாங்கம் நிச்சயம் ஏற்படுத்தத் தீரும்" என்றும் அவர் சொன்னார்.

## இ. போ. ச. இந்து ஊழியர் சங்கம்

யாழ்ப்பாணம், செவ்.

இ. போ. ச. இந்து ஊழியர் சங்க பிரதேச காரியாலயக் கிளைக்கூட்டம் அண்மையில் உதவி பிரதேச முகாமையாளர் திரு. க. பத்மராசா தலைமையில் நடைபெற்றது.

இச்சங்கத்தைச் சிறப்பான முறையில் தொழிற்படச் செய்வதற்கு இ. போ. ச. டிப்போக்களிலும் பிரதேச காரியாலயத்திலும் தனித்தனி கிளைச் சங்கங்களை நிறுவியும், இக்கிளைச் சங்க நிர்வாக உறுப்பினர்களிலிருந்து ஒரு மத்திய சபையையும் உருவாக்கவேண்டுமென்று அவர் தமது தலைமையுரையில் குறிப்பிட்டார்.

திரு. சி. நா. பாலசிங்கமும் கூட்டத்தில் பேசினார்.

பின்வருவோர் கிளைச் சங்க உத்தியோகஸ்தர்களாகத்தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர்: க. பத்மராசா, உபதலைவர்: சி. நா. பாலசிங்கம், காரியதரிசி. ஆ. பொன்னையா, உபகாரியதரிசி: க. நவரத்தினம், தனாதிகாரி: ஆ. கல்லைதம்பி, உபதனாதிகாரி: வ. சச்சிதானந்தன் கணக்குப் பரிசோதகர்: ப. தர்மராசா, 8 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது:-

சூறாவளியினால் பாதிக்கப்பட்ட திருக்கேதீஸ்வர ஆலய புனருத்தாரண நிதிக்காகப் பிரதேச காரியாலயத்திலும், டிப்போக்களிலும் (இ. போ. ச) ரூபா 2,500 வரை சேர்க்கப்பட்டது அதனை வெகுவிரைவில் திருக்கேதீஸ்வரத் திருப்பணிச் சபையிடம் ஒப்புவித்து [illegible] [illegible]டும்.

## ஒற்றுமையையும் கட்டுக்கோப்பையும் தமிழ் மக்கள் இழக்கக்கூடாது

### வரவேற்புக் கூட்டத்தில் எஸ். ஜே. வி.

சுன்னாகம், செவ்வாய்

"எந்த ஒரு சிங்கள அரசியல் கட்சியும் எமது சமஷ்டிக் கோரிக்கைக்கு இணக்கம் தெரிவிக்காத பட்சத்திலும் தமிழினம் இலங்கையில் சுயநிர்ணய உரிமை பெற்று வாழ சமஷ்டி அரசியல் அமைப்பே சிறந்ததென நாம் வலியுறுத்தி வருகிறோம்" என்று மானிப்பாய் மக்களால் உடுவில் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு வி. தருமலிங்கத்திற்கு அளிக்கப்பட்ட வரவேற்புக் கூட்டத்தில்உரைநிகழ்த்திய திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசியதாவது:- ஒரு இனத்தின் இரு பெரும் விழிகளாக பிரதேசமும், மொழியும் விளங்குகின்றன. தமிழ் மொழியும் தமிழ்ப் பிரதேசங்களும் பாதுகாக்கப்படவேண்டும். சிங்கள மக்களுடன் சங்கமமாகி விடத் தமிழினம் தயாராக இல்லை. எமக்கும் ஐ. தே. கட்சிக்குமிடையில் ஏற்பட்டுள்ள ஒப்பந்தத்தை சிதறடிக்க கடந்த முப்பது ஆண்டுகளாக தமிழினத்தை ஏமாற்றி வந்த இடதுசாரிகள் கங்கணங் கட்டிக்கொண்டு இருக்கின்றனர். தமிழினம் ஒற்றுமையையும் கட்டுக்கோப்பையும் இழந்து விடாது தொடர்ந்தும் விழிப்புடன் இருக்கவேண்டும்"

உடுவில் எம். பி. திரு. தருமலிங்கம் வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் "தமிழினத்தின் விடுதலைப் போராட்ட இயக்கமாகவே கடந்த பொதுத்தேர்தல் கருதப்பட்டது. விடுதலை இயக்கத்தின் யாத்திரைப் பாதை கடந்தசில ஆண்டுகளாக வனாந்திரமாக மாறி இருந்தது. இப்பொழுது அது புல்தரையாக மாறி உள்ளது. சில சமயங்களில் கானல் நீராகவும் இருந்ததுண்டு. ஆனால் போராட்டங்கள் தொடர்ந்தன இனிமேலும் மக்கள் போராட்டங்களில் ஈடுபடத் தயாராக வேண்டும்' எனக் குறிப்பிட்டார். திரு வி. தியாகராசா உட்பட, பலர் பேசினர்.

## ஐயாறன்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

மகிழ்ச்சியளித்தது. அவர்கள் கீழே வாழ்க!

* * *

அங்குள்ள பெரிய புத்தகசாலையையும், புத்தக வெளியீட்டுக் காரியாலயத்தையும் சில நிமிடங்கள்தான் பார்த்தேன். பல ஆராய்ச்சி நூல்களை வெளியிட்டுள்ளனர். 'ஈழநாடு' பத்திரிகையில், மதிப்புரைக்காக, அவர்கள் கடைசியாக வெளியிட்டுள்ள "திருவாசகம்" முதல் பகுதியையும் அன்புடன் தந்தனர். பெரிய அன்பு மூட்டையைச் சுமந்துகொண்டு, அங்கிருந்து மனமில்லாமல்விடைபெற்றேன்

இன்னிசையால் அங்கு வாழை, பெரிய குலை போட்டுள்ளதாக ஓர் அன்பர் தெரிவித்தார். மாணவர் விடுதியில் சாப்பிட்டுச் செல்லவேண்டுமென்றும் அன்புடன் கேட்டனர். அவற்றையெல்லாம் பார்க்கவும், அந்த அன்பையெல்லாம் ஏற்கவும் நேரம் இடந்தரவில்லை.

நீங்கள் அடுத்த முறை இந்தியா செல்லுகையில் அண்ணாமலை நகருக்கு அவசியம் செல்லவேண்டும். மூன்று நாட்களாவது அதற்கு ஒதுக்க வேண்டும். எவ்வளவு அன்புள்ளங்கள் நமக்காக அங்கு ஆவலுடன் காத்துள்ளன தெரியுமா?

* *

ஆவினில் ஐந்தும் அமர்ந்தாய் நீயே அளவில் பெருமையுடையாய் நீயே, பூவினில் நாற்றமாய் நின்றாய் நீயே போர்க்கோலங் கொண்டெயிலெய்தாய் நீயே, நாவில் நடுவுரையாய் நின்றாய் நீயே கண்டிப்படியென்மேல் வைத்தாய் நீயே, தேவ ரறியாத தேவன் நீயே திருவையாறகலாத செம்பொற் சோதீ.

—அப்பர் அடிகள்

## பட்டினசபை உபதேர்தல் முடிவு

உடுப்பிட்டி, திங்கள்

வெலியடி பட்டினசபையின் ஏழாவது வட்டார இடைத்தேர்தலில் திரு. பொ. செல்வராசா 48 அதிகப்படியான வாக்குகளால் வெற்றியீட்டியுள்ளார்.

வாக்குகள் விபரம் வருமாறு: பொ. செல்வராசா 292, கே. தவராசா 244, எந்த வாக்கும் பழுதடையவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

## பாதயாத்திரை

யாழ்ப்பாணம், செவ்.

எதிர்வரும் சனிக்கிழமை இரவு ஒன்பது மணியளவில் நல்லூர் கந்தசாமி கோவிலிலிருந்து செல்வச்சந்நிதிக்கு பஜனைக் கோஷ்டியொன்று பாதயாத்திரை செல்லவிருக்கிறது.

## கோழிகள் திருட்டு

சாவகச்சேரி, திங்கள்

சாவகச்சேரி தெற்கில் வசிக்கும் வல்லிபுரம் என்பவருடைய வீட்டில் சுமார் பதினொரு விலையுயர்ந்த உயர்ஜாதி கோழிகள் திருட்டுப்போனதாக சாவகச்சேரிப் பொலிசாரிடம் புகார் செய்யப்பட்டதைத் தொடர்ந்து சாவகச்சேரிப் பொலிசார் மூவர் கொண்ட வாலிப கோஷ்டி ஒன்றைக் கைதுசெய்துள்ளனர். இவர்கள்தவிர இத்திருட்டில் சம்பந்தப்பட்டதாகக் கூறப்படும் வேறு மூவரையும் பொலிசார் தேடித்திரிகின்றனர்.

## மகஜர்

உடுப்பிட்டி, திங்கள்

யாழ் ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் கடந்த இரண்டு ஆண்டுகளாகக் கூட்டப்படவில்லையென்றும் ஆண்டுக் கூட்டம் நடைபெறாது இயங்கும் இந்த ஸ்தாபனம் நடாத்தும் பிரவேச பண்டித- பாலபண்டித- பண்டிதபரீட்சைகள் செல்லுபடியாகா தென்றும் புகார் செய்யும் மகஜரொன்றை உதவி வித்தியாதிபதிக்கு அகில இலங்கை பண்டிதர் சங்கச் செயலாளர் பண்டிதர் திரு க. வைரவநாதர் அனுப்பி வைத்துள்ளார்.

## செயலாளர் தெரிவு

பருத்தித்துறை, திங்கள்

பருத்தித்துறை கட்டைவேலி மெதடிஸ்ட் சேகரத்தின் பல்வேறு குழுக்களுக்கும் பின்வருவோர் செயலாளர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

வருமானம் திரு. எஸ. வி. இராசசிங்கம். ஆதனம் திரு. ஜி.எம். ஆழ்வாப்பிள்ளை. பாலர் பாடசாலை திரு. எஸ. வி. இராசசிங்கம். இளைஞர் பகுதி திருமதி ரி. ஆரியரத்தினம். சுந்தாயக்கூட்டம் திரு. யே. கே. பொன்னுத்துரை. சமுதாய முன்னேற்றம் திரு. யே. கே. செல்லத்துரை. சுவிசேஷம் திரு யோ மு ஆழ்வாப்பிள்ளை. செனட் பிரதிநிதிகள் திரு டபிள்யூ என் எஸ சாமுவேல், திரு டபிள்யூ ஆர் அருளையா.

## WANTED

"A Manager, Bar Steward and Cook for newly opened establishment, Experience in Hotel & Bar management essential Security essential for Manager and Bar Steward. Please apply in writing with testimonials to 153 Hospital Road, Jaffna. 25*

இந்தப் பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் [illegible] மேல வீதி 48-ம் இலக்கத்தில் [illegible] அச்சகத்தில் 1965-ம் ஆண்டு [illegible] 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org